வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 20.12.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 354 | பக்கங்கள் : 12

# தமிழரசு செயலருக்கு எதிராக சிவமோகன் வழக்கு தாக்கல்!

## கட்சியின் மத்திய குழுவிலிருந்து யாரையும் நீக்க அதிகாரம் கிடையாது என வலியுறுத்தி

- குமார கோகுலன் -

யாழ்ப்பாணம், டிசெம்பர் 20

**இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கத்துக்கு எதிராக கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான சி.சிவமோகன் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாப்பை மீறி, செயலாளர் செயற்படமுடியாது என்பதனால், கட்சியின் மத்திய குழுவில் இருந்து யாரையும் நீக்க முடியாது எனவும், அதற்கான நீதியை பெறவே, யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் நேற்று(18) வழக்கொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழரசுக்கட்சியின் யாப்பின் அடிப்படையில் மத்திய குழு உறுப்பினர்கள் எவரையும் நிறுத்துவதற்கு அதிகாரம் இல்லை.

மூலக்கிளை, பிரதேசக் கிளையில் எவரேனும் தவறு செய்திருந்தால் மாத்திரமே அது தொடர்பான

11

# ஜனாதிபதிக்கு வரவேற்பு தெரிவித்த வடக்கு கடற்றொழிலாளர் இணையம்!

மன்னார், டிசெ. 20

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையால் இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக இந்திய பிரதமரிடம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கருத்தை தாம் வரவேற்பதாகவும்,ஆனால் அது எழுத்து வடிவில் இல்லை என்பதை கருத்தில் கொள்ளவேண்டும் எனவும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று மதியம் இடம்பெற்ற

11

# இந்திய மீனவர்களின் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையா?

## அது என்ன என கேட்கிறார் டக்ளஸ்

யாழ்ப்பாணம், டிசெ. 20


"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி - இலங்கையின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடனான சந்திப்பின்போது கடற்றொழிலாளர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் குறித்த மனிதாபிமான

11

# இலங்கை அரசின் பொறுப்புக்கூறலை அர்த்தமுள்ளதாக்குவதற்கு உதவுங்கள்

## கனேடிய அரசிடம் சிறீதரன் எம்.பி கோரிக்கை



ஒட்டாவா, டிசெ. 20

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசுக்கு இனியும் கால நீடிப்பும் அரசியல் வெளியும் வழங்காது, குற்றவியல் பொறுப்புக்கூறல் தொடர்பான சர்வதேச விசாரணையை நோக்கி அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் விதத்தில் அடுத்த தீர்மானத்தில் தகுந்த தரமுயர்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது எமது மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இலங்கை தொடர்பான தீர்மா னங்களைப் பிரேரிக்கும் மையக் குழு நாடுகளிடம் இந்தத்

11





# 103 ரோஹிங்கியா அகதிகளுடன் நேற்று முள்ளிவாய்க்காலில் ஒதுங்கியது படகு!

முல்லைத்தீவு, டிசெ. 20

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் மியன்மார் நாட்டு பயணிகள் சுமார் 103 பேர் அடங்கிய நாட்டுப்படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த கப்பலில் பெண்கள், சிறுவர்களும் வயோதிபர்களும் உள்ளடங்கியிருக்கின்றனர்.

குறித்த கப்பலில் இருப்பவர்களுக்கு உணவுகள், உலருணவுகளை முல்லைத்தீவு மீனவர் சங்கத்தினர் வழங்கினர். அதில் சிலர் மயக்கநிலையிலும், சுகவீன முற்று இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மியன்மாரிலிருந்து புறப்பட்ட

11

# நாணய நிதிய கொள்கைகளில் இருந்து விலகினால் மீண்டும் நெருக்கடி வரும்!

## அநுர அரசுக்கு ரணில் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 20

அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிலிருந்து விலகினால் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று வெளியிட்டுள்ள காணொளியிலேயே அவர் இந்த விடயத்தை

11

# இலங்கைக்கு 150 மில்லியன் டொலர் கடன் ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் ஒப்பந்தம்



கொழும்பு, டிசெ. 20

150 மில்லியன் டொலர் கடனை இலங்கை மின்சார சபைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்று வியாழக்கிழமை கையெழுத்திட்டது.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன முன்னிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின்

11

# அர்ஜுன மகேந்திரனுக்கு பகிரங்க பிடியாணை!

கொழும்பு, டிசெ. 20

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் மற்றும் பெர்பச்சுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் பணிப்பாளராக செயற்பட்ட அஜான் ஹார்திய புஞ்சிஹேவா ஆகியோரை உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு கொழும்பு பிரதான நீதவான் திலின கமகே நேற்று பகிரங்கப் பிடியாணை பிறப்பித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி

11

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து அநுர அரசு நீதியை நிலைநாட்டும்

## கர்தினால் மல்கம் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 20

ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையை வெளிக்கொணர்வதன் மூலம் தற்போதைய அரசாங்கம் நீதியை நிலைநாட்டும் என்ப தில் நம்பிக்கையுடன் இருப்பதாக

11

# புதிய அரசமைப்பை அநுரவென்றாலும் நிறைவேற்றுவார் என எதிர்பார்க்கிறோம்

## முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய

கொழும்பு, டிசெ. 20

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு அன்று நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்று நாடு பாரியளவில் முன்னேற்றமடைந்திருக்கும். தற்போதைய ஜனாதிபதியாவது அதனை


11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழியவளையில் இரவோடு இரவாக நடக்கும் பெரும் மணல் கொள்ளை!

## கட்டுப்படுத்த நடவடிக்கை இல்லை



யாழ்ப்பாணம், டிசெ. 20
வடமராட்சி கிழக்கு, ஆழியவளை பகுதியில் இரவோடு இரவாக சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

ஆழியவளைப் பகுதியில் மணல் சட்டவிரோதமாக அகழப்படுவதாக பொலிஸாருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டபோதும் அவர்களால் அந்த மணல் கொள்ளையை கட்டுப்படுத்த முடியவில்லை என்று கூறப்படுகிறது.

நள்ளிரவு நேரம் காவலாளர்கள் நிறுத்தப்பட்டு, ஜே.சி.பி இயந்திரம் கொண்டு டிப்பர்கள் மூலம் மணல் கடத்தல் காரர்களினால் மணல் கொள்ளையிடப்படும் சம்பவம் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பாதைகளை அழித்து வீதிக்கு அருகில் வைத்தே பெருமளவான மணல் வளம் சூறையாடப்பட்டு, மணல் கொண்டு செல்லப்படுகிறது. இதனால் சீரற்று காணப்படும் அந்த பாதைகளில் தற்போது பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

மணல் மேடுகளை அழிப்பதால் கடல் நீர் குடிமனைகளுக்குள் புகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கிராம அலுவலர் ஊடாக மருதங்கேணி பிரதேச செயலர் மற்றும் மருதங்கேணி பொலிஸாருக்கு அறிவித்தும் இது வரை மணல் கொள்ளை தடுத்து நிறுத்தப்படவில்லை எனவும் பொலிஸார் யாரையும் இது வரை கைது செய்யவில்லை என்றும் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (அ)




# யாழ். மாவட்ட செயலகத்தில் ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.20
யாழ்ப்பாணம் மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் ஏற்பாட்டில் 2024 ஆம் ஆண்டிற்கான ஒளிவிழா நிகழ்வு மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தின் தலைவரும் உதவி மாவட்ட செயலாளருமான உ. தர்சினி தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நத்தார் தீப ஒளியூட்டலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் கலந்து கொண்டு சிறப்பித்தார். (எ)

# மணல் கடத்திய டிப்பர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு



வடமராட்சி, டிசெ. 20
மணல் கடத்திய டிப்பர் வாகனம் ஒன்றைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கைப்பற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை வடமராட்சி, வல்லிபுரம் பகுதியில் சட்டவிரோத முறையில் மணல் அகழ்ந்து கொண்டு தப்பிச் சென்ற டிப்பர் வாகனத்தைப் பருத்தித்துறை பொலிஸார் வல்லிபுரம் - ஆனைவிழுந்தான் வீதியில் வைத்து நிறுத்துமாறு கோரிய போது அது தப்பியோட முற்பட்டது. இதன்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி டிப்பரைக் கைப்பற்றினர்.

கடத்தக்காரர்கள் தப்பித்த நிலையில், டிப்பர் வாகனம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (அ-02)

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் அம்புலன்ஸ் படகு சேவையை தொடர்ந்தும் நடத்துக!

## கடற்படையிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 20
நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான அம்புலன்ஸ் படகு சேவையை கடற்படையினர் தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன் கடற்படையினரிடம் கோரியுள்ளார்.

ஹியூமெடிக்கா நிறுவனத்தால் நடத்தப்படும் அம்புலன்ஸ் படகுச்சேவை தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றிருந்தது

இதன்போது, நெடுந்தீவிலிருந்து நோயாளர்களை கொண்டு வரும் சேவை ஹியூமெடிக்கா நிறுவனத்தின் அம்புலன்ஸ்



படகுச்சேவை மூலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மாதாந்தம் 15 இலிருந்து 20 நோயாளர்கள் வரை இவ்வாறு அம்புலன்ஸ் படகுச்சேவை மூலம் கொண்டுவரப்படுகின்றார்கள். இவ்வாறான சேவையை முன்னெடுக்கும் ஹியூமெடிக்கா நிறுவனத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் நன்றிகளைத் தெரிவித்தார்.

இதேவேளை கடற்படையினராலும் தற்போது அம்புலன்ஸ் படகுச்சேவை நடத்தப்பட்டு வருகின்றமையையும் குறிப்பிட்ட ஆளுநர் அதனைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தார்.

அதேவேளை கடந்த நவம்பர் மாத இறுதியில் யாழ்ப்பாணத்தில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக படகு சேவைகள் இடம்பெறாத நிலையில், நெடுந்தீவில் இருந்து மூன்று நோயாளர்கள் விமானப்படையினரின் உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணம் அழைத்து வரப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# பொன்னாலையில் வீடுடைத்து திருடிய இருவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், டிசெ.20
யாழ்ப்பாணம், பொன்னாலையில் வீடுடைத்து திருடியவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை பகுதியில் வீடுடைத்து தளபாடப் பொருட்கள் பலவற்றை திருடிய இருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 16ஆம் திகதி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் திருட்டு தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் இருவரை கைது செய்தனர்.

விசாரணைகளின் பின்னர் அவர்களை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-65)

# வெளிநாட்டுக் கையிருப்பில் பாதிப்பு ஏற்படாதவகையில் வாகன இறக்குமதி

கொழும்பு, டிசெ. 20
சர்வதேச நாணய நிதியம் நிர்ணயித்த இலக்குகளை தாண்டி இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு சுமார் 6.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை தனது வெளிநாட்டு கையிருப்பை வெற்றிகரமாக கட்டியெழுப்பியுள்ளது.

தற்போது பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட்டுள்ளதால் வாகன இறக்குமதியை மீண்டும் ஆரம்பிக்க முடியும்.

நாட்டின் வெளிநாட்டு கையிருப்பில் பாதிப்பு ஏற்படாத வகையில் வாகன இறக்குமதி மேற்கொள்ளப்படும் - என்றார்.

மேலும் பொருத்தமான நிதிக் கொள்கைகள் வாகன இறக்குமதியைக் கட்டுப்படுத்த உதவும் என்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் தெரிவித்தார். (அ)

# கிளிநொச்சியில் நடைபெற்ற வெள்ள அனர்த்த ஒத்திகை!



கிளிநொச்சி, டிசெ. 20
வேர்ட் விசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் என்பவற்றின் ஆதரவோடு வெள்ள முன்னாயத்த ஒத்திகை ஸ்கந்தபுரம் கிராமத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மணியங்குளத்தின் கீழ் உள்ள மக்கள் மணியங்குளம் உடைப்பெடுத்தால் எவ்வாறு முன்னாயத்தமாக செயற்பட வேண்டும் என தெளிவுபடுத்தப்பட்டனர்.

குறித்த அனர்த்த முன்னாயுத்த ஒத்திகையில் இராணுவத்தினர், பொலிஸார், பிரதேச சபையினர், சுகாதாரத்துறையினர் என அனர்த்தத்தின் போது செயற்படும் அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
20.12.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வழக்குகளில் சாதனை படைக்கும் கட்சி

இலங்கை தமிழ் அரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைந்ததை, நினைவு கூர்ந்திருக்கும் நிலையில் - அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கு தடை விதிக்கக் கோரி வழக்கொன்றை தாக்கல் செய்திருக்கின்றார். கட்சிக்கான புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவானதைத் தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி, புதிய வழக்குகளாகத் தொடர்கின்றது. ஒரு கட்சி அதனுடைய உள்ளகப் பிரச்னையை தீர்க்க முடியாமல் நீதிமன்றத்தை நாடிக் கொண்டிருப்பதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியானது, புதிய சாதனை படைத்திருக்கின்றது. இலங்கை வரலாற்றில் வேறு எந்தவொரு கட்சியும் தங்களுடைய உறுப்பினர்களால் இந்தளவு வழக்குகளை எதிர்கொண்டிருக்காது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மீதான அபிமானத்தில் இப்போதும் வடக்கு, கிழக்கில் வாழும் கணிசமான தமிழ் மக்கள் வாக்களிக்கின்றனர். ஒப்பீட்டடிப்படையில் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு தனிக்கட்சியாக தமிழ் அரசுக் கட்சிதான் இருக்கின்றது. மக்களின் வாக்களிப்பு உண்மையில் கட்சியின் மீதான நம்பிக்கை அல்ல - மாறாக, தமிழ் மக்கள் வாக்களிப்பதற்கு இன்னொரு நம்பிக்கையான தமிழ் கட்சி இல்லை என்பதுதான்.

இருக்கின்ற ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் தங்களின் நாடாளுமன்றக் கதிரைக்காக கட்சி நடத்திக் கொண்டிருக்கும் சூழலில், ஒப்பீட்டடிப்படையில் தமிழ் அரசுக் கட்சி ஒன்றே தமிழ் மக்களில் அனேகருக்கு பழக்கமான கட்சியாக இருக்கின்றது. தவிர, இன்றிருக்கும் கட்சிகள் அனைத்துமே பெரும்பாலும் வடக்கு மைய கட்சிகள்தான். பெரும்பாலான கட்சிகள் யாழ். குடாநாட்டுக்கான கட்சிகள் மட்டும்தான்.

இதன் காரணமாகவே மக்கள் - குறிப்பாக கிராமப்புற மக்கள் பெருவாரியாக வாக்களிக்கின்றனர். தமிழ் அரசுக் கட்சியால் அரசியல் ரீதியில் எதனையும் அடைய முடியாது என்பது வாக்களிக்கும் ஒவ்வொரு குடிமகனுக்கும் நன்கு தெரியும் - ஆனாலும் தமிழர்களின் அடையாளமாக ஒரு கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கு முன்னால் தமிழ் அரசுக் கட்சி மட்டுமே இருக்கின்றது. இதன் காரணமாகவே ஒப்பீட்டடிப்படையில் அதிகளவான மக்கள் ஆதரவை தொடர்ந்தும் தமிழ் அரசுக் கட்சி தக்க வைத்திருக்கின்றது. ஒரு புதிய அரசியல் கட்சி உருவாகும் வரையில் இந்த நிலைமை தொடரலாம் ஆனால், நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகள் - முக்கியமாக வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தேசிய கட்சிகளை நோக்கிச் சென்று கொண்டிருப்பதையே காண்பிக்கின்றது.

உட்கட்சி பிரச்னையையே தீர்த்துக் கொள்ள முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கும் கட்சி ஒன்றால், தென்னிலங்கையுடன் எவ்வாறு பேச முடியும்? தென்னிலங்கையும் இராஜதந்திர தரப்புக்களும் இந்தக் கட்சியை எந்தளவுக்கு முக்கியமான ஒன்றாக நோக்கும்?

உள்ளக பிரச்னைகள் எழுவது சாதாரணமானது. பலரை உள்ளடக்கியிருக்கும் ஒரு கட்சிக்குள் பிரச்னைகள் தவிர்க்க முடியாதவை. இவ்வாறான பிரச்னைகள் எழுகின்ற போது, அதனை தீர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு கட்சியும், உள்ளக விசாரணை பொறிமுறை ஒன்றைக் கொண்டிருக்கும். ஆனால், தமிழ் அரசுக் கட்சிக்குள் அவ்வாறான பொறிமுறை எதுவும் இல்லை. ஏனெனில் பிரச்னைகளை தீர்க்க வேண்டிய தலைமைப் பொறுப்பிலிருப்பவர்கள்தான் பிரச்னைக்குரியவர்களாகவும் இருக்கின்றனர். இதனால்தான் நீதிமன்றம் செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்கின்றது. தமிழ் அரசுக் கட்சியின் இன்றைய நிலைமை ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது - அதாவது, தமிழ் மக்களின் அரசியல் தகுதிநிலை என்பது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான நிலைக்கு கீழிறங்கிவிட்டது. தமிழ் தேசிய அரசியல் என்பது வெறும் சுலோகம் மட்டும்தான். ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது

# தனியார் கல்வி நிலையங்கள் ஞாயிற்றுக்கிழமை இயங்காது

யாழ்ப்பாணம், டிசெ.20

ஞாயிற்றுக்கிழமை முழுவதும் தனியார் கல்வி நிலைய செயல்பாடுகளை நிறுத்துவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்களின் செயல்பாடுகள் தொடர்பில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் உரையாற்றிய அரசாங்க அதிபர், மாவட்ட செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய

தரம் 9 மற்றும் தரம் 9 இற்கு உட்பட்ட வகுப்புகளுக்கான தனியார் கல்வி நிலைய மற்றும் குழு வகுப்புச் செயல்பாடுகளை மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயல்பாடுகளுக்காகவும், அறநெறிசார் செயல்பாடுகளுக்காகவும், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் வேளைகளிலும் ஞாயிற்றுக்கிழமை முழு நேரமாகவும் நிறுத்துவது தொடர்பாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானமானது மாவட்டத்தின் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டே எடுக்கப்பட்டதாகவும் -

பிள்ளைகளின் நலன்கருதி தனியார் கல்வி நிறுவனங்களின் அமைவிடங்கள், வகுப்பறைக் கட்டமைப்பு மற்றும் வசதிகள் தொடர்பிலும் நிறுவன உரிமையாளர்களை கூடுதலான கவனம் செலுத்துமாறும் அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.(எ)

# காணி உரித்து பதிவு தொடர்பில் யாழ்ப்பாணத்தில் செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.20

காணி உரித்துப் பதிவு தொடர்பான செயலமர்வு யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரையாற்றிய அரச அதி பர், "பொது மக்களுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான சேவை வழங்கும் உத்தியோகத்தர்களாக பதிவாளர் திணைக்கள உத்தியோகத்தர்கள் உள்ளனர்.

இவர்கள் திருமணம், பிறப்பு, இறப்பு மற்றும் காணிப் பதிவுகள் தொடர்பான சேவையை வழங்கும் நோக்குடன் செயல்படும் பிரதானமான உத்தியோகத்தர்களாகவும், பொதுமக்களின் அன்றாட கருமங்களுடன் தொடர்புபட்டுள்ள பொது நலன் சார்ந்தவர்களாக மக்களுக்குச் சேவையாற்றும் உன்னதமான பொறுப்புள்ள உத்தியோகத்தர்களாகவும் விளங்குகின்றனர்.

இந்தச் செயலமர்வானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறுவது சிறப்பான விடயமாகும். இது இந்த மாகாணங்களில் சேவையை மென்மேலும் வினைத்திறனாக வழங்குவதற்கு உந்துதலாக அமைந்துள்ளது. அதற்காகப் பதிவாளர் நாயகத்துக்கு நன்றி தெரிவிக்கின்றோம்" - என்றார். (எ)

# பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு

கிளிநொச்சி, டிசெ.20

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலையத்தால் பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

வலுவூட்டல் மற்றும் வாழ்வாதார உதவி வழங்கல் செயல்திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்ட 10 தொழில் முயற்சியாளர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் இதன் போது வழங்கப்பட்டன.



முதல்கட்டமாக கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நான்கு பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

ஏனையோருக்கு அந்தந்த பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் தேசிய நிலைய பிரதிப் பணிப்பாளர் அ. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் கலந்து கொண்டு வாழ்வாதார உதவிகளை வழங்கினார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வெளியூரிலிருந்து வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும்.

**இடபம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**மிதுனம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். உங்களைப் பற்றி சிலர் தவறாக பேசினாலும் அதற்காக வருத்தப்படாதீர்கள். எதிர்பார்ப்புகள் தாமதமாகி முடியும் நாள்.

**சிம்மம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். எளிதாக முடிய வேண்டிய விஷயங்களை கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**கன்னி**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பழைய கடனில் ஒருபகுதியை பைசல் செய்வீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**விருட்சிகம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாகபோய் முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாகபோய் முடியும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அதிகாரிகளுடன் பனிப்போர் வந்து நீங்கும்.

**கும்பம்**
நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். வழக்கில் சாதகமாக தீர்ப்பு வரும். குடும்பத்தில் இழந்த செல்வாக்கை மீண்டும் பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு.

**மீனம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வருங்கால திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

# மன்னாரில் தற்காலிக வியாபார நிலைய வியாபாரிகளால் திடீரென குழப்ப நிலை

மன்னார், டிசெ.20

மன்னாரில் தற்காலிக வியாபார நிலைய வியாபாரிகளால் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் நகர சபைக்குச் சொந்தமான பிரதேச செயலக வீதியில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு நகர சபையால் நாள் தோறும் அனுமதி வழங்கப்பட்டு அவற்றுக்கான பற்றுச்சீட்டும் வழங்கப்பட்டு வருகின்றது

இருப்பினும், வருட இறுதியில் குத்தகை அடிப்படையில் கடைகளை விற்பனை செய்வதற்காக 10 - 15 நாட்கள் குறித்த நாள் வியாபாரிகளை வேறு இடங்களில் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நகர சபை கோரும். அவ்வாறு நகர சபை கோரும் போது நாள் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் வேறு இடங்களில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருட இறுதி சந்தை நிறைவடைந்ததும் மீண்டும் அதே பகுதியில் நகர சபையின் அனுமதியுடன் வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவர்.

ஆனால், இம்முறை அப்பகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்ட 30 இற்கும் மேற்பட்ட நாள் வியாபாரிகள், நகர சபையின் கோரிக்கையை ஏற்று வேறு இடங்களுக்கு சென்ற போதிலும் தங்களை தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் என வெளிப்படுத்திய சிலர் அரசியல் தலையீட்டை உட்புகுத்தி குறித்த கடைகளில் இருந்து வெளியேற மறுத்தனர்

இதனையடுத்து இந்த விடயம் சட்டவிரோதம் என்ற அடிப்படையில் மன்னார் பொலிஸாரின் உதவியுடன் குறித்த கடைகளை மன்னார் நகர சபை அகற்ற முற்பட்ட வேளை சில வியாபாரிகள், பொலிஸார் மற்றும் நகர சபை செயலாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன் தாங்கள் ஆளுநரிடம் பேசி விட்டதாகவும் வியாபார நிலையங்களை மூடமுடியாது எனவும் தெரிவித்தனர்.

இந்த நிலையில் அப்பகுதிக்கு வருகை தந்த தேசிய மக்கள் சக்தியின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் என தெரிவித்த நபர், குறித்த விடயத்தில் தலையிட்டதுடன் 45 வியாபாரிகள் தொழில் செய்த குறித்த பகுதியில் வெறுமனே தங்கள் கட்சி சார்பான 11 பேருக்கு கடைகளை வழங்க ஆளுநரிடம் அனுமதி பெறப்பட்டு விட்டதாகவும் அது தொடர்பில் எழுத்து மூலம் ஆளுநர் தெரியப்படுத்துவார் எனவும் கூறினார்.

இந்த நிலையில் 11 பேர் தவிர்ந்த ஏனைய வியாபாரிகள் தாங்கள் என்ன செய்வது என குறித்த இணைப்பாளருடன் முரண்பட்ட நிலையில் அவர்களை மரியாதை குறைவாக பேசியுள்ளார்.

அதேநேரம் தான் பேசிய விடயங்களை காணொலியாக பதிவு செய்யாமல் நிறுத்தியதுடன் காணொலி எடுக்க முயன்ற ஊடகவியலாளரின் தொலைபேசியையும் சேதப்படுத்த முயற்சித்தார். நகர சபை செயலாளரை தனது பணியாளர் போன்று தனது வாகனத்தில் அழைத்து செல்லவும் முற்பட்டார் இந்த நிலையில் எழுத்து மூலமான எந்தவொரு அறிவு றுத்தலும் ஆளுநரிடம் இருந்து வழங்கப்படாவிட்டால் என்னால் சட்டவிரோதமான இந்த கடைகளுக்கு அனுமதி வழங்க முடியாது என நகர சபை செயலாளர் பகிரங்கமாக தெரியப்படுத்தினர்.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் பெயரை பயன்படுத்தி ஆளுநர் வரை சென்ற நிலையில் குறித்த அனுமதியை வழங்க ஆளுநரும் மறுத்த நிலையில் குறித்த 11 வியாபாரிகளும் குத்தகைக்கு விடப்படும் பகுதியில் இருந்து வெளியேறினர். (எ)

# வடக்கு மாகாணம்தான் முதலிடம்

யாழ்ப்பாணம், டிசெ.20

வடக்கு மாகாணத்தில் பிரண்டிக்ஸ் நிறுவனத்தால் வழங்கப்பட்ட “ஸ்மார்ட் போர்ட்களின்“ பயன்பாடு மற்றும் எதிர்கால வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

பிரண்டிக்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு வேலைத்திட்டத்தின் (சி. எஸ். ஆர்.) கீழ் வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு 387 “ஸ்மார்ட் போர்ட்கள்“ வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் பயன்பாடு வடக்கு மாகாணத்தில் சராசரியாக 76 சதவீதமாக உள்ளதாகவும் அத்துடன் வடக்கு மாகாணமே இலங்கையில் முதலிடத்தில் உள்ளதாகவும் பிரண்டிக்ஸ் நிறுவனப் பிரதிநிதிகள் ஆளுநருக்கு சுட்டிக்காட்டினர்.

எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துவதன் தேவைப்பாடு மற்றும் அடுத்த ஆண்டு சராசரியை 90 சதவீதமாக நிர்ணயித்து வேலைகளை முன்னெடுப்பது தொடர்பிலும் இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

இதில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் கந்தையா பிரட்லி ஜெனட் ஆகியோருடன் பிரண்டிக்ஸ் நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (எ-05)

# ஜெனிவா சமவாய ஆண்டு நிறைவு யாழ். பல்கலையில் விசேட நிகழ்வு


யாழ்ப்பாணம், டிசெ.20

ஜெனிவா சமவாயங்களின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சுவிஸர்லாந்து தூதரகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த கலந்துரையாடல் நிகழ்வும், கண்காட்சியும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் உள்ளிட்ட விருந்தினர்கள் இணைந்து கண்காட்சியை நாடா வெட்டி திறந்து வைத்தனர்.



இந்த நிகழ்வில், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான சுவிஸர்லாந்தின் பிரதித் தூதுவர் ஒலிவர், சர்வதேச செஞ்சிலு வைச் சங்கத்தின் தூதுக்குழுத் தலைவர் சப்பாஸ், யாழ். பல்க லைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குண ராஜா, சட்டத்தரணியும் பேரா சிரியருமான வி. ரி. தமிழ்மாறன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 40 குடும்பங்களுக்கு உதவிகள்

யாழ்ப்பாணம், டிசெ.20

யாழ்ப்பாணம் - மல்லாகம், குளமங்கால் கிராமத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 40 குடும்பங்களுக்கு 200, 000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள், குளமங்கால் சிரேஷ்ட பிரஜைகள் நல நோன்பு நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் மற்றும் தொண்டர்கள் இணைந்து இந்த உத விகளை வழங்கினர். (எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி இறக்குமதி செய்தும் தொடர்ந்தும் தட்டுப்பாடு!

## நுகர்வோர் தரப்பில் விசனம்

கொழும்பு, டிசெ. 20

**அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை அமுல்படுத் தப்பட்டுள்ள போதிலும் சந்தையில் சில அரிசி வகைகளுக்குத் தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்காக அரசாங்கம் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் சந்தைக்கு இதுவரையில் உரிய முறையில் அரிசி கிடைப்பதில்லை என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் நாளாந்தம் 6,500 முதல் 6,600 மெற்றிக் தொன் அரிசி மக்கள் பாவனைக்காக நுகரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் தட்டுப்பாட்டிற்குத் தீர்வாக நேற்று முன் தினம் பிற்பகல் வரை சுமார் 16,000 மெற்றிக் தொன் அரிசி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக சுங்க பேச்சாளர் சிவலி அருக்கொட தெரிவித்துள்ளார்.

அதில் 6000 மெற்றிக் தொன் பச்சை அரிசியும், 10,000 மெற்றிக் தொன் நாட்டு அரிசியும் அடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கடந்த 10 நாட்களில் பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள பாரிய மற்றும் நடுத்தர அரிசி ஆலைகளிலிருந்து சுமார் 10,000 மெற்றிக் தொன் அரிசி சந்தைக்கு விடு விக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# சட்டவிரோதமான மதுபானங்களுக்கு அடிமையானோருக்கு புதிய மதுபானம்!

கொழும்பு, டிசெ. 20

சட்டவிரோத மதுபானங்களுக்கு அடிமையானவர்களுக்காக சலுகை விலையில் மதுபான வகையொன்று அடுத்த வருடம் முதல் தயாரிக்கப்படவுள்ளதாக மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உதயகுமார பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதேநேரம், மது வரி திணைக்களத்தின் இந்த வருடத்துக்கான வருமான இலக்கில் இதுவரையில் 210 மில்லியன் ரூபாய் ஈட்டப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டுக்கான மதுவரித் திணைக்ககளத்தின் வருமான இலக்காக 232 மில்லியன் ரூபாய் என மதிப்படப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள வருமான இலக்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ள முடியும் என மதுவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் உதயகுமார பெரேரா கூறினார்.

அதேநேரம், வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட சட்டவிரோதமான மதுபானங்கள் தற்போது மதுபானச்சாலைகளில் விற்பனை செய்யப்படுவதாக தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

அவ்வாறு விற்பனை செய்யப்படுகின்ற மதுபானங்களை கொள்வனவு செய்ய வேண்டாம்.

அவற்றில் நஞ்சு தன்மை காணப்படக்கூடிய சாத்தியம் நிலவுகிறது. இதனைக் கருத்திற் கொண்டு புதிய வகையான மதுபானம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட வுள்ளதாக மதுவரித் திணைக் களத்தின் ஆணையாளர் நாய கம் உதய குமார பெரேரா குறிப்பிட்டார். (அ)

# மின்சாரம் தாக்கி சிறுமி உயிரிழப்பு!

கொழும்பு, டிசெ. 20

புத்தளம் நவகத்தேகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தரனகஹவெவ பகுதியில் மின்சாரம் தாக்கி 14 வயதுடைய சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முதினம் இரவு இடம்பெற்றுள்ளதாக நவகத்தேகம பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்பற்ற மின் கம்பியில் இருந்து மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முயன்ற போது குறித்த சிறுமி மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

அதன் பின்னர் அவர் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது, அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவரது சடலம் புத்தளம் வைத்தியசாலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை நவகத்தேகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 77 நாடுகளில் வசிக்கும் இலங்கையருக்கு இணையவழி மூலம் பிறப்பு சான்றிதழ்கள்

கொழும்பு, டிசெ. 20

77 நாடுகளில் வசிக்கும் இலங்கை பிரஜைகளுக்கு இணையவழி மூலம் பிறப்பு சான்றிதழை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பதிவாளர் திணைக்களத்தின் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டு பதிவாளர்களை சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சுடன் இணைந்து இலங்கைக்கு வெளியே வசிக்கின்ற 77 நாடுகளில் வசிக்கின்ற பிரதிநிதிகள் தங்களுடைய பிறப்புச் சான்றிதழ்களை இணையவழி மூலம் பெற முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் இரு வாரங்களுக்கு முன்பாக 7 நாடுகளோடு இணைந்து கலந்துரையாடியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். வெளிநாட்டில் இருப்பவர்களும் இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

பிறப்பு, இறப்பு, விவாகரத்து தொடர்பான சேவைகளை டிஜிற்றல் முறையில் செயற்படுத்துவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் பதிவாளர் நாயகம் விஜயசிங்க தெரிவித்தார்.

எதிர்காலத்தில் அடையாள அட்டைகளை வினியோகிக்கின்ற போது ஆட்பதிவு திணைக்களம் மற்றும் பதிவார் திணைக்களம் இணைந்து செயற்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# புதிய வாகனங்களை இறக்குமதி செய்துள்ள டொயோட்டா லங்கா!

கொழும்பு, டிசெ. 20

வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை கட்டம் கட்டமாக தளர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், டொயோட்டா லங்கா நிறுவனம் தனது முதலாவது வாகனத் தொகையை இலங்கைக்கு கொண்டு வந்துள்ளது.

சுற்றுலாத்துறைக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களே இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு, நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பு குறைந்ததால், வாகனங்களை இறக்குமதி செய்வதற்குக் கட்டுப்பாடுகளை விதிக்கும் நடவடிக்கைகளை முன்னைய அரசாங்கம் மேற்கொண்டது.



எனினும், பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருவதாலும், அன்னியச் செலாவணி கையிருப்பு அதிகரிப் பதாலும், இறக்குமதி கட்டுப்பாடுகளை தளர்த்தி பல கட்டங்களாக வாகனங்களை மீண்டும் இறக்குமதி செய்ய அரசு முடிவு செய்தது.

இதற்கமைய சுற்றுலாத் துறையில் பயன்படுத்தப்படும் வாகனங்களை இறக்குமதி செய்ய முதல் அனுமதி வழங்கப்பட்டது.

அந்த முடிவின் பின்னர், டொயோட்டா லங்கா நிறுவனம் தனது முதல் வாகனத் தொகையை நாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. (அ)

# பாடசாலை மாணவருக்கு 6,000 ரூபாய் கொடுப்பனவு

கொழும்பு, டிசெ. 20

2025ஆம் ஆண்டு தொடக்கத்திலிருந்து பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 25,000 மாணவர்களுக்கு 6,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும் என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் போது பாடசாலை மாணவர்களில் 55 வீதத்திற்கும் அதிகமானோர் அதிக பொருளாதார பிரச்னைகளுக்கு முகங்கொடுத்தனர்.

கிராமிய மற்றும் பெருந்தோட்டப் பாடசாலைகளை அண்மித்த பகுதிகளில் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளதாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய சுட்டிக்காட்டினார். (அ)

# இலத்திரனியல் கடவுச்சீட்டு; சட்டமா அதிபர் விளக்கம்!

கொழும்பு, டிசெ. 20

இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு தொடர்பில் சட்டமா அதிபரினால் நீதிமன்றுக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

5 மில்லியன் இலத்திரனியல் கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனு தொடர்பில் தேசிய பெறுகைகள் குழு முன்வைத்துள்ள பரிந்துரைகளை அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த பரிந்துரைகளைப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் ஊடாக அமைச்சரவையின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு நேற்று முன்தினம் அவர் அறியப்படுத்தியுள்ளார்.

குறித்த கடவுச்சீட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கான விலைமனுவை சவாலுக்கு உட்படுத்தி எபிக் லங்கா தனியார் நிறுவனம் தாக்கல் செய்த மனு நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (அ)

# தடுப்பூசியினால் சுகயீனமடைந்த சப்ரகமுவ பல்கலை மாணவர்கள்

## அறிக்கை சமர்ப்பிக்க பிரதமர் பணிப்புரை

கொழும்பு, டிசெ. 20

சப்ரகமுவ பல்கலைக்கழக விவசாய பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 7 பேர் பல்கலைக்கழக மருத்துவ நிலையத்தில் தடுப்பூசி போட்டுக்கொண்டதன் காரணமாக சுகயீனமடைந்த சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு, பிரதமர் ஹரிணி அமரசூரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நோய்வாய்ப்பட்ட மாணவர்கள் மேல் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மாணவர்களின் நிலைமையை ஆராய்ந்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், விவசாய பீட பீடாதிபதி மற்றும் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஆகியோருக்கு, பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதியாகும் 1 கிலோ அரிசிக்கு 65 ரூபாய் வரி அறவீடு நியாயமற்றது

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 20

**அரிசி உற்பத்தியாளர்கள் ஒருபுறம் மக்களை சுரண்டிப் பிழைக்கிறார்கள், மறுபுறம் அரசாங்கம் அரிசி இறக்குமதிக்கு அதிக வரியை அறவிட்டு பிழைக்கிறது. இறக்குமதி செய்யப்படும் 1 கிலோகிராம் அரிசிக்கு 65 ரூபா வரி அறவிடுவது நியாயமற்றது. சந்தையில் அரிசி விலையை குறைக்க வேண்டுமாயின் இறக்குமதி வரியை குறைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் அரசாங்கத்திடம் வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி அநுரகுமார வரிகளை குறைத்து அடுத்த ஆண்டு மார்ச் மற்றும் ஏப்ரல் மாதமளவில் நிவாரணம் வழங்குவதாக குறிப்பிடுகிறார். அரிசி பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் அரிசி இறக்குமதிக்கான வரையறையை அரசாங்கம் தற்காலிகமாக நீக்கியுள்ளது. மறுபுறம் 70 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரிசி தட்டுப்பாட்டுக்கு தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி பிரதான அரிசி உற்பத்தியாளர்களிடம் 5 தடவைகள் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். அரிசி உற்பத்தியாளர்களின் கோரிக்கைக்கு அமைய அரிசியின் விலை அதிகரிக்கப்பட்டு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

நாடு அரிசியின் விலை 230 ரூபா என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் சந்தையில் 250 ரூபாவுக்கே அரிசி விற்பனை செய்யப்படுகிறது. அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையிலும், சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாடு நிலவுகிறது. அரிசி உற்பத்தியாளர்களே அரிசியின் விலையை இன்றும் தீர்மானிக்கிறார்கள்.

தனியார் அரிசி இறக்குமதியாளர்கள் இந்தியாவில் இருந்து அரிசியை இறக்குமதி செய்கிறார்கள். இந்திய விலைக்கு அமைய ஒரு கிலோ கிராம் அரிசியை இறக்குமதி செய்வதற்கு இலங்கை நாணய அலகில் 150 ரூபாவை செலவிடுகிறார்கள். அத்துடன் இறக்குமதி செய்யப்படும் ஒருகிலோ கிராம் அரிசிக்கு 65 ரூபா வரி அறவிடப்படுகிறது.

வரி உள்ளடங்களாக ஒரு கிலோகிராம் அரிசியை இறக்குமதி செய்வதற்கு வர்த்தகர்கள் 215 ரூபாவை செலவிட நேரிடும். இவ்வாறான நிலையில் அவர்களால் எவ்வாறு 220 ரூபாவுக்கு அரிசியை விற்பனை செய்யமுடியும்-என்றார். (அ)

# ஞானசாரருக்கு பிடியாணை!

கொழும்பு, டிசெ. 20

இஸ்லாம் மதத்தை இழிவுபடுத்தியதாக தொடரப்பட்ட வழக்கில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ள ஞானசார தேரர், நேற்று வழக்கு விசாரணைக்கு ஆஜராகாததால், அவரை கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது ஞானசார தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. கட்சிக்காரருக்கு சுகயீனம் ஏற்பட்டுள்ளதால் அவரால் நீதிமன்றில் ஆஜராக முடியாமல் போனதாக ஞானசார தேரர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன, வழக்கின் தீர்ப்பை ஜனவரி 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். இதன்படி ஞானசார தேரரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்து மாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி!

கொழும்பு, டிசெ. 20

உப்பு இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் மண்ணார், அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் அதற்குத் தீர்வாகப் பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உப்பை இறக்குமதி செய்ய அனுமதி வழங்குமாறு உப்பு உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அதற்கமைய, பதனிடப்படாத அயடின் சேர்க்கப்படாத 30,000 மெற்றிக் தொன் உச்ச அளவுக்கு உட்பட்ட உப்பை ஜனவரி 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் வரையறுக்கப்பட்ட இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபத்தின் மூலம் இறக்குமதி செய்து உள்நாட்டு உப்பு உற்பத்தியாளர்கள் ஊடாக சந்தைக்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# வாகன விபத்துகளால் நாளாந்தம் 8 பேர் பலி!

கொழும்பு, டிசெ. 20

ஏனைய நோய்களுடன் ஒப்பிடுகையில் நாட்டில் குடும்பத் தகராறு, உயரமான இடங்களில் இருந்து கீழே விழுதல் மற்றும் வாகன விபத்துகள் போன்ற அவசர சிகிச்சை வழங்கப்பட வேண்டிய விபத்துகளால் ஒவ்வொரு ஆண்டும் அதிகமானோர் உயிரிழக்கின்றனர். அவர்களில் வாகன விபத்துகளுக்கு ஆளாகுவதால் மாத்திரம் நாளாந்தம் சுமார் 8 பேர் உயிரிழப்பதாக தேசிய அவசர சிகிச்சை விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் விசேட வைத்திய நிபுணர் கமிந்த விஜேநாயக்க தெரிவித்தார்.

அவசர சிகிச்சைப் பிரிவு சேவைகள் தொடர்பில் பொது மக்களை தெளிவூட்டுவதற்காக சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- விபத்துக்களின் போது உரிய நேரத்தில் உரிய முறையில் நோயாளியை அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வது அவசியம்.

நோயாளியின் உடலை கிடையாக கிடத்தி அவர்களை சிகிச்சைக்கு அழைத்துச் செல்ல வேண்டும். இதன்போது அம்புலன்ஸ் சேவை மற்றும் தாராளமான இடவசதி உள்ள தனியார் வாகனங்களை பயன்படுத்தலாம். எனினும் முச்சக்கர வண்டிகளில் நோயாளர்களை அழைத்துச் செல்வது உரிய முறையல்ல.

இதனால் சுவாச சிக்கல் ஏற்பட வாய்ப்புள்ளது. எவ்வாறெனினும் விபத்துக்களின்போது முன்வந்து உதவக் கூடியவர்களில் முதன்மையானவர்கள் முச்சக்கர வண்டிச் சாரதிகள் என்பதையும் நினைவு கூர கடமைப்பட்டுள்ளேன்.

ஆகையால் நோயாளியை குறிப்பிட்ட நேரத்திற்குள் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வது அவசியம்-என்றார். (அ)

# தேசிய மருத்துவத் துறையை மேம்படுத்த 3 பிரிவுகளின் கீழ் விசேட வேலைத்திட்டம்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

தேசிய மருத்துவ துறையை பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளதுடன் இதன் மூலம் சுற்றுலாத் துறையின் பங்களிப்புடன் 8,500 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈடுவதற்கும் எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிப்பில் ஈடுபட்ட அமைச்சர் அங்கிருந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,நாட்டு மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு தற்போது நடைமுறையில் உள்ள ஆயுர்வேத மருத்துவ முறையை மேம்படுத்துவதற்க்கான வேலைத்திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது.

மேற்கேத்தேய, ஆயுர்வேதம், சித்த மருத்துவம், யுனானி, ஓமியோபதி மற்றும் பாரம்பரிய மருத்துவத்தையும் ஒருங்கிணைத்து மருத்துவ சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பரிசோதனை மட்டத்தில் சுற்றுலா பயணிகளை கவர்வர்வதை இலக்காகக் கொண்டு ஆயுர்வேத வைத்திய முறையை ஸ்தாபிக்க வேண்டும்.

தேசிய மருத்துவத் துறையை பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் மேம்படுத்துவதற்கான விசேட வேலைத்திட்டம் எதிர்வரும் நாட்களில் ஒழுங்கமைக்கப்பட உள்ளது.

சுகாதார சேவையில் தற்போது 1,164 அரச வைத்தியசாலைகளும், ஆயுர்வேத பிரிவில் 112 வைத்தியசாலைகளும் இயங்கி வருகின்றன.

இந்த வைத்தியசாலைகள் ஒவ்வொன்றிலும் தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றைக் மேம்படுத்துவதே எமது நோக்கமாகும்.

உள்ளூர் மருத்துவ முறையை மேம்படுத்துவதும், மருத்துவ முறையின் தனிச்சிறப்புகளை கண்டறிந்து அவற்றை சுற்றுலாத் துறையுடன் இணைப்பதும் அரசாங்கத்தின் முதன்மையான நோக்கமாகும்.

அடுத்த இரண்டு வருடங்களுக்குள் 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதுடன், அடுத்த வருடத்திற்குள் 3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் என்ற இலக்கை சென்றடைவதே அரசாங்கத்தின் மிக பெரிய எதிர்பார்ப்பாகும்-என்றார். (அ)

# சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் நடைபெறும்

கொழும்பு, டிசெ. 20

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை மார்ச் மாதம் நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவ்வருடத்திற்கான சாதாரண தரப் பரீட்சை 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எச். ஜே. எம் சி. அமித்ஜயசுந்தர தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தொலைபேசி இலக்கங்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரிகளையும் பரீட்சை திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளது.

தொலைபேசி எண்கள் 1911, 0112784208, 0112784537, 0112786616

தொலைநகல் எண் - 0112784422பொதுத் தொலைபேசி இலக்கங்கள் - 0112786200, 0112784201, 0112785202

மின்னஞ்சல் முகவரி - [illegible] (அ)

# அரச வைத்தியர்களின் ஓய்வை 63 வயது வரை நீடிக்க அனுமதி!

கொழும்பு, டிசெ. 20

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளின் ஓய்வு வயதை 63 வயது வரை நீடிக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சுகாதார, ஊடகத்துறை அமைச்சர் மற்றும் பொதுநிர்வாக, மாகாண மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சரினால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, சிறப்பு வைத்திய அலுவலர்கள், தர வைத்திய அலுவலர்கள், சிறப்பு பல்வைத்திய அலுவலர்கள், அனைத்து பல் அறுவை சிகிச்சை அலுவலர்கள் மற்றும் நிர்வாக மருத்துவ அலுவலர்கள் உட்பட அனைத்து அரசு பதிவு மருத்துவ அலுவலர்களின் ஓய்வு வயது 63 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.முன்னதாக, வைத்தியர்களின் ஓய்வு வயது 65 ஆக இருந்தது, பின்னர் அது 60 ஆக குறைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்கா ஒப்பந்தம் பாதகமானதல்ல!

## மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

**பாராளுமன்றத்தில் நேற்று இலங்கைக்கான காகிதாதிகளின் குறை நிரப்பு பிரேரணை மீதான 2ஆம் நாள் விவாதத்தில் மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, “சிறந்த பொருளாதார சந்தையைக் கொண்டிருக்கின்ற இந்தியாவுடன் எட்கா ஒப்பந்தத்தை செய்வது பாதகமானது அல்ல என தனது தனிப்பட்ட கருத்தை தெரிவித்துள்ளார்.**



அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்-கடந்த கால அரசாங்கங்களை விமர்சிக்கும் ஆளுந்தரப்பினர்களில் பெரும்பாலானோர் இலவசக் கல்வியின் ஊடாகவே கல்வி கற்றுள்ளார்கள், முன்னேற்றமடைந்துள்ளார்கள். கடந்த கால அரசாங்கங்கள் நாட்டுக்கு ஏதும் செய்யவில்லை என்று குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக பொய்யுரைக்க வேண்டாம். இலவசக் கல்வித் திட்டத்தில் 41 இலட்சம் மாணவர்கள் உள்ளடங்குகிறார்கள். இவர்களுள் 10 இலட்சம் மாணவர்களுக்கு மாத்திரம் 6,000 ரூபா நிவாரணத் தொகையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொருளாதார பாதிப்பின் பின்னர் 56 சதவீதமான மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். 25 சதவீதமான மாணவர்களின் கல்வி கேள்விக்குள்ளாக்கப்பட்டு ள்ளது. ஆகவே மாணவர்கள் மத்தியில் வேறுபாடுகளை தோற்றுவிக்காமல் 41 இலட்சம் மாணவர்களுக்கும் 6,000 ரூபா கொடுப்பனவை வழங்கவேண்டும். இந்த நாட்டின் வங்குரோத்து நிலைக்கு மக்கள் விடுதலை முன்னணியும் நிச்சயம் பொறுப்புக் கூற வேண்டும். அதிலிருந்து தப்ப முடியாது.

சர்வதேச நாணய நிதியம் பற்றி இந்த சபையில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இந்திய விஜயம் பற்றி ஏதும் குறிப்பிடவில்லை. இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்-என்றார். (அ)

# மின்சக்தி,வலுசக்தி துறைகளை காட்டிக் கொடுத்துள்ளது அரசு!

## விமல் வீரவன்ஸ காட்டம்

கொழும்பு, டிசெ. 20

இந்திய ஆக்கிரமிப்பை கடுமையாக எதிர்த்த ரோஹண விஜேவீரவின் கொள்கையைப் பின்பற்றும் கட்சியின் தலைவரது ஆட்சியில் இலங்கையின் மின்சக்தி மற்றும் வலுசக்தி துறைகள் அந்நாட்டிடம் காட்டிக் கொடுக்கப்பட்டுள் ளன. எட்கா ஒப்பந்தத்தின் ஊடாக எதிர்கால சந்ததியினரின் தொழில் வாய்ப்புக்களை பறிப்பதற்கான சதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

தேசிய சுதந்திர முன்னணி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உயர் வலு மின் தொகுப்பை நிறுவ இணக்கம் காணப்பட்டதாக இரு தலைவர்களதும் கூட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பல்பொருள் குழாய் அமைக்கும் திட்டத்தின் ஊடாக எரிபொருள் மற்றும் திரவ நிலை இயற்கை எரிவாயு பரிமாற்றத்தை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது மேலதிக மின்சாரம் காணப்படுவதால் அதனை இந்தியாவுக்கு விற்பனை செய்வதற்கு இது சிறந்த வாய்ப்பாகும் என்று அரசாங்கம் குறிப்பிடுகின்றது. இன்று மின்சாரம் தேவைக்கதிகமானதாக இருந்தாலும் நாடு அபிவிருத்தியடையும் போதும் அதனைப் பயன்படுத்த முடியும். அத்தோடு அவசர நிலை மைகளின்போது இந்தியா விடமிருந்து மின்சாரத்தைக் கொள்வனவு செய்து கொள்வ தற்கும் இந்த திட்டம் உதவும் என்றும் கூறப்படுகிறது.

இந்திய ஆக்கிரமிப்பு தொடர்பில் இலங்கைக்கு கற்றுக் கொடுத்த ரோஹண விஜேவீரவின் நாமத்தைப் பயன்படுத்துபவர்களின் ஆட்சியின் கீழ் இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமையே பாரிய பேரிடராகும். இலங்கையின் வலுசக்தி துறையில் தலையிடுவதற்கு யாருக்கும் இடமளிக்கப் போவதில்லை எனக் கூறியவர்கள், இன்று இந்தியாவுக்கு சென்று வலுசக்தி மற்றும் மின்சக்தி துறையை காட்டிக் கொடுத்துள்ளனர்-என்றார். (அ)

# பொலிஸ் வாகன தேவைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தம்

கொழும்பு, டிசெ. 20

இலங்கை பொலிசுக்கான வாகனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்திய அரசால் வழங்கப்படுகின்ற நிதியுதவி பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்றபோது அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை பொலிஸ/க்கான வாகனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்திய அரசால் இலங்கைக்கு 300 மில்லியன் இலங்கை ரூபாய் நிதியை நன்கொடையாக வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நன்கொடையைப் பயன்படுத்தி வடமாகாணத்தின் பொலிஸ் நிலையங்களின் நடவடிக்கைகளுக்குத் தேவையான கெப் வண்டிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த நன்கொடையைப் பெற்றுக் கொள்வதற்காக இருதரப்புக்களுக்கு ,டையிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது-என்றார். (அ)

# பயங்கரவாதத் சட்டத்தை உடனே நீக்கி தேர்தல் கால வாக்குறுதியை ஈடேற்றுக!

## ஒடுக்குமுறைச்சட்டங்களுக்கு எதிரான கூட்டிணைவு ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, டிசெ. 20

பயங்கரவாத த்தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலைக்காப்புச்சட்டம் ஆகிய ஒடுக்குமுறைச்சட்டங்களை நீக்குவதன் ஊடாகவே உங்களது தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியும். அத்தோடு ஜனநாயகத்தை வலுப்படுத்துவதிலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும் நீங்கள் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டினை மீளுறுதிப்படுத்தமுடியும் என 66 அமைப்புக்களை உள்ளடக்கிய “ஒடுக்குமுறைச்சட்டங்களுக்கு எதிரான கூட்டிணைவு" ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் சுட்டிக் காட்டியுள்ளது.

ஒடுக்குமுறைச்சட்டங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி மேற்குறிப்பிட்ட ஒடுக்குமுறைச் சட்டங்களுக்கு எதிரான கூட்டிணைவு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-அடிப்படை உரிமைகளையும், சுதந்திரத்தையும் புறந்தள்ளக்கூடிய சட்டங்கள் முற்றாக நீக்கப்படுவதை முன்னிறுத்தி நாம் கடந்த பல வருடகாலமாக தனித்தனியாகவும், கூட்டிணைந்தும் பணியாற்றிவருகின்றோம்.

தேசிய மக்கள் சக்தி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன அத்தகைய சட்டங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாகக் குரலெழுப்பி வந்திருப்பதுடன், அவற்றை முற்றாக நீக்குவதில் வெற்றியும் கண்டிருக்கின்றன. உங்களது கட்சி இந்தக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வந்திருக்கின்றது.

எனவே நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவானதன் பின்னர், தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் என எதிர்பார்க்கப்பட்டதன் பின்னணியில், குறிப்பாக பயங்கரவாதத்தடைச்சட்டம் உள்ளிட்ட மிகமோசமான சட்டங்கள் முற்றாக இரத்துச் செய்யப்படும்எனக்கருதப்பட்டது.

இருப்பினும் தற்போது நபர்களைத் தடுப்புக்காவலில் வைப்பதற்குப் பயங்கரவாதத்தடைச்சட்டம் தொடர்ந்து பிரயோகிக்கப்பட்டுவருவது மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கிறது. இந்தத் தடுத்துவைப்புக்களில் அநேகமானவை வேறு சட்டங்களின் பதியப்பட்ட வழக்குகளுடன் தொடர்புடையவையாகக் காணப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதி என்ற ரீதியில் நீங்களும், உங்களது அரசாங்கமும் உங்களுடைய நீண்டகால கடப்பாட்டுக்கு அமைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்துக்கு மேலதிகமாக கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரத்தை வெகுவாக ஒடுக்கும் நிகழ்நிலைக்காப்பு சட்டமூலத்தையும் முற்றாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்-என சுட்டிக் காட்டப்பட்டுள் ளது. (அ)

# விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதங்களை குறைப்பது குறித்து அமெரிக்காவுடன் பேச்சு

## அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 20



வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு தேவையான ஆலோசனை வழிகாட்டல் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை அமெரிக்காவிலிருந்து பெற்றுக் கொள்ள பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்டதாக விவசாய கால்நடை அபிவிருத்தி மிருகவள நீர்ப்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் தாம் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகள் அமெரிக்காவில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய விவசாய அமைப்புக்கள் தொடர்பான எண்ணக்கருக்களை முன்னெடுத்து தேசிய உற்பத்திக்கான சர்வதேச சந்தை வாய்ப்புக்கள் உருவாக்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தெங்கு தொடர்பான உற்பத்திகள் மற்றும் தேங்காய்ப்பால் போன்றவற்றை நவீன முறையில் பதப்படுத்துவது தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகள் நடத்தியதாக அவர் மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# எலிக்காய்ச்சல் தொடர்பில் விழிப்புணர்வு நடவடிக்கை

சாய்ந்தமருது, டிசெ.20

**வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அதிகரித்து வரும் எலிக்காய்ச்சல் நோய்த் தாக்கம் தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**



இதன் தொடர்ச்சியாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கும் மக்களுக்கும் எலிக்காய்ச்சல் (லெப்டோஸ்பைரோஸிஸ்) தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் நடைபவனி நடைபெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக் அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் இந்த விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, எலிக்காய்ச்சல் நோய் தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு, சாய்ந்தமருது குடாக்கரை மேற்கு விவசாயிகள் சங்கத்தின் உறுப்பினர்களும், பொதுமக்களும் இந்த நடைபவனியில் கலந்து கொண்டனர். (எ)

# கிழக்கு மாகாணம் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராய்வு



திருகோணமலை, டிசெ.20

கிழக்கு மாகாணத்தில் தற்போது கல்விச் செயல்பாடுகளை முன்னெடுப்பதில் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆளுநர் தலைமையில் ஆராயப்பட்டது.

கிழக்கு மாகாண வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பு திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கல்வி நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதில், கிழக்கு மாகாணம் தற்போது எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து, இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. (எ)

# முழுமையான அதிகாரங்களை வரப்பிரசாதமாக பார்க்கிறோம்

## அஷ்ரப் தாஹிர் எம். பி. தெரிவிப்பு

நிந்தவூர், டிசெ.20

மாகாண சபையின் முழுமையான அதிகாரங்கள் கிடைக்குமாயின் அது இப்பிராந்தியத்துக்கான ஒரு வரப்பிரசாதமாக நாங்கள் பார்க்கின்றோம் என்று அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்துள்ளார்.



மாகாண சபை முறைமை தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் மற்றும் மாகாண சபை அதிகாரங்கள் குறித்து நிந்தவூரில் உள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், ஒன்பது மாகாணங்களில் மாகாண சபைகள் தற்போது இயங்கி வருகின்றன. இந்த மாகாண சபையானது மக்களுக்கான பணிகளை செய்வதற்கும் மக்களுக்கான வேலைத்திட்டங்களை இலகுபடுத்துவதற்கும் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தின் மூலமாக வடக்கு - கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தமிழ் முஸ்லிம் மக்களுக்காக உருவாக்கப்பட்டது. இந்த மாகாண சபை முறைமையால் கடந்த காலங்களில் இரு மாகாணங்களை தவிர ஏனைய ஏழு மாகாணங்களை சேர்ந்த மக்கள் தான் பயனடைந்தார்கள் என்பதை நான் கூற விரும்புகின்றேன்.

இதில் வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் என இரண்டு மாகாணங்களை குறிப்பிட்டு சொல்ல வேண்டும். இதில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம், தமிழ், சிங்களவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இங்கு உரிய அதிகாரம் வழங்கப்படாமையால் தான் இம்மாகாணத்தில் எமது சமூகம் முழுமையான நன்மையை பெற்றுக் கொள்ள முடியாது உள்ளது. இந்த நிலையில்கூட இந்த மாகாண முறையை ஒழிக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாடு தற்போது உள்ள அரசாங்கத்தில் உள்ளவர்கள் மத்தியில் பரவலாக பேசப்படுகின்ற விடயமாகவுள்ளது. அத்துடன் இந்த சந்தர்ப்பத்தில் இன்னும் மூன்று வருடங்களுக்கு பின்னர் தான் இவ்விடயம் குறித்து பேச முடியும் என்று மற்றுமொரு கருத்தும் இன்னொரு சாராரால் வைக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் காணி, பொலிஸ் அதிகாரங்கள் சிறுபான்மை மக்களின் கைகளுக்கு சென்றால் பொலிஸ் அதிகாரம் காணி அதிகாரம் இரண்டையும் தங்களுக்கு ஏற்றால் போல் பயன்படுத்தி விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அந்தச் சட்டங்களை அமுல்படுத்துவதற்கு மத்திய அரசு மிக நீண்ட காலமாக தடைகளை அல்லது அதிகாரத்தை வழங்காமல் இருந்து வருகின்றது.

எனவே, மாகாண சபைகளின் தேர்தல் நடத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதிகாரங்கள் முழுமையாக வழங்கப்படுமாக இருந்தால் மக்கள் நன்மை அடைவார்கள். அரசியல்வாதிகளும் மக்களுக்கு பணிகளை செய்ய வேண்டும் என்பதற்காகவே இந்த அதிகாரங்களை கோருகின்றார்கள்- என்றார். (எ)

# தேர்தல் காலங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுக

## ஹிஸ்புல்லா எம். பி. கோரிக்கை

மட்டக்களப்பு, டிசெ. 20

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் பொருட்களின் விலைகளை குறைப்போம், மின்சார கட்டணங்கள் மற்றும் எரிபொருட்களின் விலைகளை குறைப்போம் என்று பல்வேறு விடயங்களை சொல்லி ஆட்சிக்கு வந்தது. ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நிறைவடைந்தும் பொருட்களின் விலைகள் குறைந்ததாக நாம் அறியவில்லை. மாறாக அரிசி, தேங்காய் மற்றும் சில பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. விலைகளை குறைக்க முடியாத நிலையில் அரசு திண்டாடுகிறது என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

எனவே, அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து மக்கள் குறைந்த விலையில் பொருட்களை பெற்றுக்கொள்வதற்குரிய நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்.

அஸ்வெசும திட்டத்தின் ஊடாக அரச ஊழியர்களுக்கும் 6000 ரூபாயை வட்டியில்லாத கடனாக வழங்க நடவடிக்கை எடுப்பதோடு, அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மரங்கள் விழுந்து சேதமடைந்த நிலையில் பல பாடசாலைகளை நடத்த முடியாத நிலை காணப்படுகிறது. பல வீதிகளும் சேதமடைந்து காணப்படுகின்றன. அவற்றை புனரமைக்க அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்- என்றார். (எ)

# மூதூரில் கலாசார விழா



திருகோணமலை, டிசெ.20

மூதூர் பிரதேச செயலகம், கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மூதூர் பிரதேச கலாசார அதிகார சபை ஆகியன இணைந்து நடத்திய பிரதேச கலை இலக்கிய விழா மூதூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் எம். பீ. எம். முபாறக் தலைமையில் நடைபெற்றது.


இந்த விழாவில் நான்கு சமூகங்களையும் பிரதிநிதித்து வப்படுத்தும் வகையில் பாடசாலை மாணவர்கள், கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களால் கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

அத்தோடு பிரதேச செயலக மட்டத்தில் நடத்தப்பட்ட பாடசாலை மற்றும் திறந்த போட்டிகளில் பங்கேற்று முதல் மூன்று இடங்களைப் பெற்று வெற்றியீட்டியவர்களுக்கும், நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கும் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (எ)

# பிரதேச செயலகத்தில் ஒளிவிழா

களுவாஞ்சிக்குடி, டிசெ.20

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



அலுவலக உத்தியோகத்தர்களால் கரோல் கீதம், நாடகம், நடனம் போன்ற பல கலை நிகழ்வுகள் ஆற்றுகை செய்யப்பட்டதுடன், நத்தார் தாத்தா வருகை மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், நிருவாக உத்தியோகத்தர் வே. தவேந்திரன், அலுவலக பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சிடோ’ புயல் தாக்கத்தால் 100 பேர் பலி, 500 பேர் காயம்

மபுதோ, டிசெ.20

**ஆபிரிக்க நாடுகளை புரட்டிப்போட்ட “சிடோ புயல்“ தாக்கத்தால் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். சுமார் 500 பேர் படுகாயமடைந்தனர். புயல் தாக்கத்தால் அந்த நாடுகள் உருக்குலைந்துள்ளன.**



இந்தியப் பெருங்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுப்பெற்றது. “சிடோ“ என பெயரிடப்பட்ட இந்தப் புயல் கடந்த சில நாட்களாக கிழக்கு ஆபிரிக்கா அருகே கடலில் நிலைகொண்டது. இதனால் மலாவியில் கடந்த சில நாட்களாக கனமழை கொட்டி வருகிறது. இதனால் அங்கு ஊருக்குள் வெள்ளம் புகுந்து நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில் அண்டை நாடான மொசாம்பிக்கையும் “சிடோ“ புயல் தாக்கியது. இதனால் அங்கு கனமழை பெய்து வருகிறது. குறிப்பாக நியாஸ்சா, கபோ டெல்கடோ உள்ளிட்ட கடலோர மாகாணங்கள் கடுமையான பாதிப்பை சந்தித்து வருகின்றன. அங்குள்ள ஆறுகளின் நீர் மட்டம் அதிகரித்து தாழ்வான பகுதிகளுக்குள் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

புயல் காரணமாக மொசாம்பிக் நாட்டில் மட்டும் 34 பேர் உயிரிழந்தனர். 300 பேர் படுகாயமடைந்தனர். 24 ஆயிரம் வீடுகள், 150 மீன்பிடி படகுகள் சேதமடைந்தன. இதேவேளை, ஏனைய நாடுகளில் புயல் தாக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்புகளை சேர்த்தால் நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருக்க வாய்ப்புள்ளது எனவும் 500 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் அதிகாரிகள் கூறினர்.

தென்னாபிரிக்கா ஏற்கனவே இந்த ஆண்டு வறட்சியால் தவித்த நிலையில், இந்த புயல் ஆயிரக்கணக்கான மக்களை பட்டினியில் தவிக்கவிட்டுள்ளது. (எ)

# பழிக்கு பழி வாங்குவோம்

## இந்தியாவுக்கு டரம்ப் மிரட்டல்

நியூயோர்க், டிசெ.20

அமெரிக்க பொருட்களுக்கு இந்தியா இதுபோன்று அதிக வரிகளை விதித்தால், நாங்களும் பதிலடியாக அதே அளவுக்கு வரிகளை விதிக்கும் பழிக்கு பழி திட்ட அணுகுமுறையை கையிலெடுப்போம் என அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால் ட்ரம்ப் தெரிவித்தார்.

இந்தியாவின் வரி விதிப்பு நடைமுறைகளை கடுமையாக விமர்சித்த டரம்ப், சில அமெரிக்க பொருட்களுக்கு 100 சதவீதம் அளவுக்கு வரி விதிக்கப்படுகிறது எனவும் சுட்டிக் காட்டினார்.

நியூயோர்க்கில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

இந்தியா நிறைய வரிகளை விதிக்கிறது. பிரேசிலும் அதிக வரி விதிக்கிறது. அவர்கள் அதிக வரிகளை விதிக்க விரும்புகிறார்கள் என்றால், அதன்படி செயல்படட்டும். ஆனால், நாங்களும் அதே அளவுக்கு வரி விதிப்போம். வர்த்தகத்தில் வெளிப்படைதன்மை என்பது என்னுடைய பொருளாதார கொள்கையின் முக்கிய விடயம்- என்றார்.

அமெரிக்க எல்லை பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத போதைப்பொருட்கள் கடத்தல், அகதிகள் புலம்பெயர்தல் உள்ளிட்ட விவகாரங்களில் கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால் கனடா மற்றும் மெக்சிக்கோ நாடுகளின் அனைத்து இறக்குமதி பொருட்களுக்கும் 25 சதவீதம் அளவுக்கு வரி விதிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். (எ)

# உக்ரைன் உளவாளி சிக்கினர்!

மொஸ்கோ, டிசெ.20

ரஷ்யாவின் அணு ஆயுத படைகளின் தலைவர் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் உக்ரைன் உளவாளி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் குண்டு வெடித்ததில் ரஷ்யா வின் அணு, உயிரியல் மற்றும் இரசாயன பாதுகாப்புப் படைக ளின் தலைவரான ஜெனரல்இகோர் கிறில்லோவ் உயிரிழந்தார் என்று ரஷ்ய இராணுவம் தெரிவித்துள் ளது.இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள் ளதாக ரஷ்ய உளவுத்துறை தெரிவித்துள்ளது. அந்த நபரின் பெயர் உள்ளிட்ட விவரங்கள் வெளியிடப்படவில்லை. (எ)

# புற்றுநோய்த் தடுப்பூசி கண்டுபிடித்தது ரஷ்யா

## நோயாளிகளுக்கு இலவசமாக வழங்க முடிவு

மொஸ்கோ, டிசெ.20

புற்றுநோய்க்கான தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சந்தையில் அறிமுகமாகவுள்ள இந்தத் தடுப்பூசி கட்டணமின்றி கிடைக்கும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

புற்றுநோய்க்கான எம். ஆர். என். ஏ. தடுப்பூசியை உருவாக்கியுள்ளதாக ரஷ்ய நாட்டின் சுகாதாரத் துறையின் கதிரியக்க மருத்துவ ஆராய்ச்சி மைய இயக்குநர் ஆண்ட்ரே கப்ரின் தெரிவித்துள்ளார். இந்த தடுப்பூசி நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இதை ரஷ்ய நாட்டு செய்தி முகமை ரஸ் உறுதி செய்துள்ளது.

இந்தத் தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனையில் புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு கட்டி வளர்வதை தடுப்பதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்த ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், புற்றுநோய் தடுப்பு மருந்து உருவாக்கத்தை கிட்டத்தட்ட நெருங்கி விட்டதாக தெரிவித்திருந்தார். இந்தச் சூழலில் தற்போது புற்றுநோய் தடுப்பூசி தயாரிப்பு குறித்து ரஷ்யா அறிவித்துள்ளது.(எ)

# வடக்கு காஸாவில் இஸ்ரேல் தாக்குதல்

## மருத்துவர் உட்பட 16 பேர் பலி


டெல் அவிவ், டிசெ.20

வடக்கு காஸாவை முற்றுகையிட்டு, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், அல் -ஆலி அரப் மருத்துவமனையில் உள்ள குழந்தைகள் மற்றும் ஒரு மருத்துவர்உட்பட 16 பேர்பலியாகினர்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையால் பெய்த் ஹனூன், பெய்த் லாஹியா மற்றும் ஜபாலியா ஆகிய பகுதிகளில் உள்ள மக்கள் பசி, பட்டினியால் அவதிப்படுகின்றனர். 70 நாட்களுக்கும் மேலாக இஸ்ரேல் இந்தப் பகுதியை ஆக்கிரமித்து, தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இதனால், ஐ. நா. அமைப்பால் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாத சூழல் உள்ளது. ஐ. நாவின் கோரிக்கையை இஸ்ரேல் மீண்டும் நிராகரித்துள்ளது.காஸா மீது நடத்தப்பட்டு வரும் இஸ்ரேலின் தாக்குதல்க ளால், இதுவரை 45, 097 பலஸ் தீனர்கள் உயிரிழந்தனர். ஓர் இலட்சத்து 7 ஆயிரத்து 244 பேர் காயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பாடசாலை நிகழ்ச்சியில் பரிசு வாங்க குவித்த மக்கள்

## நெரிசலில் சிக்கி 30 பேர் பலி



அபுஜா, டிசெ.20

பாடசாலை நிகழ்ச்சியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியா நாட்டின் ஒயொ மாகாணம் பசொரன் நகரில் உள்ள பாடசாலையில் கிறிஸ்மஸ் பண்டிகை, ஆண்டு நிறைவையொட்டி கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியை கண்டுகளிக்க மாணவ, மாணவியரின் குடும்பத்தினரும் பெருந்திரளில் வந்திருந்தனர். நிகழ்ச்சியின்போது பரிசு பொருட்களும் வழங்க ஏற்பட்டு செய்யப்பட்டிருந்தது.

இதனால், நிகழ்ச்சியை காணவும், பரிசு பொருட்களை வாங்கவும் பாடசாலையில் கூட்டம் குவிந்தது. அப்போது, எதிர்பாராத விதமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த கூட்ட நெரிசலில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர். (எ)

# பரஸ்பரம் குற்றம்சாட்டி பா. ஜ. க. - காங்கிரஸ் பாராளுமன்ற வளாகத்தில் நேற்று போராட்டம்





புதுடில்லி, டிசெ.20

அம்பேத்கர் பற்றிய அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் மற்றும் இந்தியா கூட்டணிக் கட்சிகளும், அமித் ஷா கருத்தை எதிர்க்கட்சிகள் திரித்து சர்ச்சையாக்குவதாகக் கூறி பா. ஜ. கவும் நேற்றுக் காலை பாராளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் பாராளுமன்ற வளாகத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று திரண்ட பா. ஜ. க. எம். பிக்கள், ‘பாபா சாஹேப் அம்பேத்கர் நமக்கு வழிகாட்டினார். ஆனால், காங்கிரஸ் தவறான பாதையில் இட்டுச்சென்றது’ என்ற பதாகைகளை ஏந்தியபடி காங்கிரஸை குற்றஞ் சாட்டினர். ஊடகங்களிடம் பேசிய மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங், “காங்கிரஸ் குடும்பத்தினர் தங்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கிக் கொண்டனர். ஆனால், அம்பேத்கருக்கு அவர்கள் வழங்கவில்லை. இதன் மூலம் பாவம் செய்தனர். அந்தப் பாவத்தைப் போக்க அவர்கள் ஒரு நாள் மௌன விரதம் இருக்க வேண்டும்.

அமித் ஷா பேச்சை காங்கிரஸ் திரித்துப் பேசுகிறது. அம்பேத்கருக்கு பாரத் ரத்னா விருது வழங்கியது பா. ஜ. க. அரசு தான். அமித் ஷா பேச்சை அரசியலாக்கி அதன்மூலம் தனக்கு பிரபல்யத்தைத் தேடிக் கொள்ள காங்கிரஸ் முயற்சிக்கிறது”- என்றார்.

போராட்டத்தின் போது பா. ஜ. க. எம். பி. பிரதாப் சாரங்கி காயமடைந்துள்ளார். பாராளுமன்றத்துக்கு வந்த காங்கிரஸ் எம். பி. ராகுல் காந்தி ஒரு எம்.பியை தள்ளிவிட அவர் தன் மீது விழுந்ததால் தனக்கு காயம் ஏற்பட்டதாக சாரங்கி குற்றஞ்சாட்டியுள்ளார்.


இதேவேளை, காங்கிரஸ் கட்சியினர் பாராளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மல்லிகார்ஜூன கார்கே உள்ளிட்டோர் பங்கேற்று அமித் ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இத்தகைய சலசலப்புகளுக்கு இடையே மக்களவை, மாநிலங்களவை இரண்டும் நேற்றும் ஒத்திவைக்கப்பட்டது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 விக்கெட் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி

## போராடி தோற்றது தென்னாபிரிக்கா



டர்பன், டிசெ.20

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி - 20, 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2- 0 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது.

பணிச்சுமை காரணமாக தென்னாபிரிக்க அணித் தலைவர் பவுமா முதலாவது போட்டியில் விளையாடவில்லை. அவருக்கு பதிலாக மார்க்ரம் அணியை வழிநடத்தினார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடி தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்களை இழந்து 239 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியின் சார்பில் அதிகபட்சமாக கிளாசென் 86 ஓட்டங்கள் எடுத்தார். பாகிஸ்தான் அணி சார்பில் அதிகபட்சமாக சல்மான் அகா 4 விக்கெட்களும், அக்பர் அகமது 2 விக்கெட்களும் வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய பாகிஸ்தான் அணியில், தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சயிம் அயூப் 119 பந்துகளில் 109 ஓட்டங்கள் சேர்த்து அணியின் வெற்றிக்கு வித்திட்டார். மறுமுனையில் விக்கெட்கள் அடுத்தடுத்து விழுந்த நிலையில் சயிம் அயூப்புடன் இணைந்த சல்மான் அகா, தனது நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி 82 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார். முடிவில் பாகிஸ்தான் அணி 49. 3 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்து 242 ஓட்டங்கள் எடுத்தது. தென்னாபிரிக்கா அணியின் சார்பில் அதிகபட்சமாக ரபாடா மற்றும் பார்ட்மென் ஆகியோர் தலா 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

இதன்மூலம் தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பாகிஸ்தான் அணி முன்னிலை பெற்றுள்ளது (எ)

# அகில் ஹுசைன் முதலிடம்



டுபாய், டிசெ.20

ரி - 20 போட்டி பந்து வீச்சாளர் தரவரிசையில் மேற்கு இந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அகில் ஹுசைன் முதலிடத்தை பிடித்துள்ளார்.

ஆண்கள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான துடுப்பாட்ட வீரர் தரவரிசை, பந்து வீச்சாளர் தரவரிசை மற்றும் ரி - 20 போட்டிக்கான துடுப்பாட்ட வீரர் தரவரிசை, பந்து வீச்சாளர் தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) வெளியிட்டுள்ளது.

இதன்படி, 20 ஓவர் போட்டி பந்து வீச்சாளர் தரவரிசையில் மேற்கு இந்திய தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் அகில் ஹுசைன் 3 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ளார். இதனால் இங்கிலாந்தின் ஆதில் ரஷித் 2ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டார். இதேபோன்று ரி - 20 போட்டி தரவரிசையில் அவுஸ்திரேலியா வீரர் ட்ராவிஸ் ஹெட் முதல் இடத்தில் உள்ளார். இரண்டாவது இடத்தில் இங்கிலாந்து வீரர் பில்ப் சால்ட் உள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர் தரவரிசையில் இந்திய வீரர் பும்ரா தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார். 2ஆவது இடத்தில் தென்னாபிரிக்க வீரர் ரபாடா உள்ளார். (எ)

# சர்வதேச தரவரிசையில் பி. வி. சிந்து முன்னேற்றம்

புதுடில்லி, டிசெ.20

சர்வதேச பட்மிண்டன் தரவரிசையில் இந்திய வீராங்கனை பி. வி. சிந்து 15ஆவது இடத்துக்கு முன்னேறினார்.

பட்மிண்டன் வீரர், வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை சர்வதேச பட்மிண்டன் சம்மேளனம் வெளியிட்டுள்ளது . இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் டென்மார்க் வீரர் விக்டர் ஆக்சல்சென் முதலிடத்தில் நீடிக்கிறார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய வீராங்கனை பி. வி. சிந்து ஒரு இடம் முன்னேறி 15ஆவது இடத்துக்கு முன்னேறினார். ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் லக்சயா சென் 12ஆவது இடத்தில் தொடர்கிறார். மற்ற இந்திய வீரர்கள் பிரனாய் (26), பிரியான்ஷு(34), கிரண் ஜார்ஜ் (38) பின்தங்கினர். இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ், சிராக் ஷெட்டி ஜோடி 9ஆவது இடத்தில் நீடிக்கிறது. (எ)



# ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை ஜோ ரூட் மீண்டும் முதலிடம்

டுபாய், டிசெ.20

ஐ. சி. சி. டெஸ்ட் தரவரிசை பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் மீண்டும் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

டெஸ்ட் தரவரிசைப் பட்டியலை ஐ. சி. சி. வெளியிட்டுள்ளது. இதில் துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை பட்டியலில் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட் 895 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியுளளார். நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அபாரமாக செயல் பட் டதால் , சக வீரரான ஹாரி புரூக்கை பின்னுக்குத் தள்ளி அவர் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.



ஹாரி புரூக் 876 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் உள்ளார். நியூசிலாந்து வீரர் கேன் வில்லியம்சன் 867 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளார் .

இந்திய வீரர்கள் ஜெய்ஸ்வால் 4ஆவது இடத்திலும் , ரிஷப் பண்ட் 9ஆவது இடத்திலும், சுப்மன் கில் 16ஆவது இடத்திலும், விராட் கோலி 20ஆவது இடத்திலும், ரோஹித் சர்மா 30ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)

# எனக்குள் கிரிக்கெட் ஆர்வம் இன்னும் ஓய்வு பெறவில்லை

## தாயகம் திரும்பிய அஸ்வின் நெகிழ்ச்சி

சென்னை, டிசெ.20

என்னால் முடிந்தவரை விளையாடுவேன். எனக்குள் கிரிக்கெட் ஆர்வம் இன்னும் ஓய்வு பெறவில்லை. சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக மீண்டும் விளையாடப் போகிறேன் என்று ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்தார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற நிலையில் அவுஸ்திரேலியாவில் இருந்து தாயகம் திரும்பிய அஸ்வினுக்கு சென்னையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "உண்மையில் எனக்கு இப்படியொரு வரவேற்பு இருக்கும் என எதிர்பார்க்கவில்லை. அனைவரும் இங்கு வந்தமைக்கு நன்றி. இதை நான் எதிர்பார்க்கவே இல்லை. கடைசியாக 2011 உலகக் கிண்ணம் வென்று வீடு திரும்பிய போது இப்படியொரு வரவேற்பு இருந்தது. அதே உணர்வை இப்போது பெறுகிறேன்.

இப்போது நான் அடுத்த பாதைக்கு செல்கிறேன். கிரிக்கெட் வாழ்வில் என்னால் இதை செய்ய முடியவில்லையே என்ற எந்த வருத்தமும் இல்லை. அப்படி பல பேரை நான் பார்த்துள்ளேன். ஆனால், எனக்கு அப்படி எதுவும் இல்லை. ஓய்வு பெற்றதிலும் வருத்தம் இல்லை.

என்னால் முடிந்தவரை கிரிக்கெட் விளையாடுவேன். சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக மீண்டும் விளையாடப் போகிறேன். இது சற்று ஆச்சரியம் தரலாம். இந்திய அணிக்காக விளையாடும் அஸ்வின் தான் ஓய்வு பெற்றுள்ளார். எனக்குள் கிரிக்கெட் இன்னும் ஓய்வு பெறவில்லை"- என தெரிவித்தார். (எ)

# சமனில் முடிந்த பிரிஸ்பேன் டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் மாற்றம்

டுபாய், டிசெ.20

பிரிஸ்பேனில் நடைபெற்ற இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி சமனில் முடிந்தது. இதையடுத்து உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி) வெளியிட்டுள்ளது. இந்த பட்டியலில் தென்னாபிரிக்கா (63.33 சதவீதம்) முதல் இடத்தில் நீடிக்கிறது.

பிரிஸ்பேன் டெஸ்ட் சமனில் முடிந்ததால் இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளின் வெற்றி சதவீதம் குறைந்துள்ளது. இந்த ஆட்டத்துக்கு முன்னர் அவுஸ்திரேலியாவின் வெற்றி சதவீதம் 60.71 ஆகவும், இந்தியாவின் வெற்றி சதவீதம் 57.29 ஆகவும் இருந்தது. இது தற்போது 58. 89 சதவீதம் (ஆஸ்திரேலியா), 55.88 சதவீதம் (இந்தியா) குறைந்துள்ளது.

டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் அவுஸ்திரேலியா 2ஆம் இடத்திலும், இந்தியா 3ஆம் இடத்திலும் உள்ளன. 4ஆவது இடத்தில் நியூசிலாந்தும் (48.21 சதவீதம்), 5ஆம் இடத்தில் இலங்கை (45.45 சதவீதம்) அணியும் உள்ளன. 6 முதல் 7 இடங்களில் முறையே இங்கிலாந்து (43.18 சதவீதம்), பாகிஸ்தான் (33.33 சதவீதம்), பங்களாதேஷ் (31.25 சதவீதம்), மேற்கு இந்திய தீவுகள் (24.24 சதவீதம்) அணிகள் உள்ளன.(எ)

# கேசவ் மகராஜ் விலகல்

டர்பன், டிசெ.20

பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி 2 ஒருநாள் போட்டிகளில் இருந்து தென்னாபிரிக்க அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான கேசவ் மகராஜ் காயம் காரணமாக விலகியுள்ளார். அவருக்கு பதிலாக பிஜோர்ன் போர்டுயின் மாற்று வீரராக அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.



இதனை யடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது ஒரு நாள் போட்டி நேற்று நடை பெற்றது. 3ஆவது மற்றும் கடைசி போட்டி நாளை மறுதினம் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசு...

முறைப்பாடு கிடைத்தால் நிறுத்துவதற்கான அதிகாரம் இருக்கின்றது.

அதை விடுத்து மத்திய குழுவில் இருக்கும் யாரையும் நிறுத்துவதற்கு செயலாளருக்கு அதிகாரம் இல்லை.

அது தவிர தமிழரசுக் கட்சிக் கூட்டம் கூடுவதாக இருந்தால் தலைவரின் கலந்துரையாடலோடு நிகழ்ச்சி நிரலை அனுப்பி அதை தலைவர் ஏற்றுக் கொண்டு கூட்டம் கூடுவதற்கு அனுமதியை பெற வேண்டும். அந்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் கூட்டத்தை நடத்த லாம் எனத் தலைவர் கூறியதன் பின்னரே கூட்டம் கூடலாம்.

அத்துடன் தலைவரின் அனுமதிக்கு பின்னரே ஏனையவருக்கும் அந்த நிகழ்ச்சி நிரலையும் கூட்டத்துக்கான அழைப்பையும் அனுப்பலாம். இவ்வாறுதான் யாப்பு கூறுகின்றது.

தலைவர் கட்சியை வழிநடத்துபவர். செயலாளர் என்பவர் கூறுவதைச் செய்பவராக தான் இருப்பார். இவ்வாறு தெளிவாக யாப்பில் கூறப்பட்டுள்ளது.

எனவே யாப்பை மீறி அனைத்தையும் செயல்படுத்த விட முடியாது. அதனை மையப்படுத்தியே யாழ் நீதி மன்றத்தில் வழக்கை தாக்கல் செய்திருந்தேன் - என்றார். (அ)

## நாணய...

குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்புக்கு அப்பால் செயற்படுவதற்கு அரசாங்கமோ அல்லது எதிர்க்கட்சியோ முயற்சிக்கக் கூடாது. அவ்வாறு செயற்படவும் முடியாது.

2024 ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரண்டு வீதமாக இருக்கும் என சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டது. அதனை மேலும் அதிகரிக்கவே நான் விரும்பினேன்.

எனினும் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டு ஐந்து வீதத்தை எட்டியுள்ளது. அதற்காக உழைத்த நிதி அமைச்சு, மத்திய வங்கி மற்றும் ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதால் அதில் ஒரு பகுதியை வரி வருமானமாகப் பெற்றோம். அதுவும் நமது வருமானம் அதிகரிக்க வழிவகுத்தது.

சர்வதேச நாணய நிதியத்துடன் நாம் செய்துகொண்ட ஒப்பந்தம் காரணமாகவே இவற்றை செய்ய முடிந்தது. அதனால் அந்த ஒப்பந்தத்தை அரசாங்கமோ, எதிர்க்கட்சியோ விட்டுக்கொடுக்க முடியாது - என்றார். (அ)

## ஈஸ்டர்...

கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்த கர்தினால், “விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து அரசாங்கம் அவ்வப்போது எங்களுக்குத் தெரிவிக்கிறது” - என்றார்.

“அரசு படுகொலை குறித்து வெளிப்படையான விசாரணையை மேற்கொள்வதாகத் தெரிகிறது. விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து அவர்கள் எங்களுடன் நடத்திய உரையாடல்களிலிருந்து இது தெளிவாகிறது” - என்று அவர் வலியுறுத்தினார்.

“எனவே, குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்,” - என்று அவர் கூறினார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பதவியேற்றவுடன், கட்டுவாப்பிட்டிய புனித செபஸ்தியார் தேவாலயத்திற்கு விஜயம் செய்தார், அங்கு ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து புதிய விசாரணை நடத்தப்படும் என்று உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## 103 ரோஹிங்யா...

பின்னர் போக்கிடம் இல்லாமலும், படகில் உணவு, குடிதண்ணீர் தீர்ந்த நிலையிலும், அவர்கள் முள்ளிவாய்க்காலில் கரையொதுங்கியுள்ளனர்.

மியன்மாரில் ரோஹிங்கியா இன சிறுபான்மை முஸ்லிம் மக்கள் அந்த நாட்டு அரசாங்கத்தால் இன அழிப்பிற்கு உட்பட்டுள்ள நிலையில், அவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் அயல் நாடான பங்களாதேசில் தஞ்சமடைந்துள்ளனர். அங்கிருந்து ஆபத்தான கடல் பயணங்களின் மூலம் இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு செல்வது வழக்கம். இவ்வாறு பயணித்த படகொன்று சிறிது காலத்தின் முன்னரும் முள்ளிவாய்க்காலில் கரையொதுங்கியிருந்தது.

தற்போது கரையொதுங்கியுள்ளவர்களை திருகோணமலையில் இருந்து கடற்ப்படை படகு ஒன்று வருகை தந்து அங்கு மீட்டுச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

## அர்ஜுன...

இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி சம்பவம் தொடர்பில் தொடரப்பட்டிருந்த வழக்கிற்கு இணையாகவே இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமையால் நீதவானினால் இந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிணைமுறி கொள்வனவின் ஊடாக அரசாங்கத்துக்கு 600 மில்லியன் ரூபாவுக்கும் அதிக நட்டத்தை ஏற்படுத்தியதாக குற்றஞ்சாட்டி குற்றப்புலனாய்வு திணைக்களத்தால் சந்தேக நபர்கள் 6 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் சந்தேக நபரான அர்ஜூன் அலோசியஸை அடுத்த வழக்கின் போது நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்துமாறு சிறைச் சாலைகள் அதிகாரிகளுக்கு நீதவான் உத்தரவிட்டார். (அ)

## புதிய...

நிறைவேற்றுவார் என எதிர்பார்ப்பதாக முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவை இலக்காகக் கொண்டு கொழும்பில் தற்கொலை குண்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு மஹரக இந்திரா புற்றுநோய் ஒழிப்பு அமைப்பிற்கு நிவாரணங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க புதிய அரசியலமைப்பினை உருவாக்கி தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தமையை இன்று பலரும் மறந்துள்ளனர். இதற்காக 21 கூட்டங்களை அவர் நடத்தியிருக்கின்றார். அவற்றில் நானும் பங்கேற்றிருக்கின்றேன். அந்த அரசியலமைப்புக்கு எந்தவொரு அரசியல்வாதியும் எதிர்ப்பினை வெளியிடவில்லை.

அன்று அந்த அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்று நாடு எந்த நிலைமையில் இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க முடியும். அவ்வாறான புரட்சிகரமான மாற்றத்தை பொருளாதார மற்றும் சமூக ரீதியில் ஏற்படுத்தியிருக்க முடியும். ஆனால் அந்த முயற்சி நிறைவேறாது போனமை எமது நாட்டின் துரதிஷ்டமாகும். புதிய ஜனாதிபதி தற்போதாவது அதனை செய்வார் என்று நம்புகின்றோம் - என்றார். (அ)

## இலங்கை...

தரமுயர்த்தலை வேண்டுவதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கனடிய வெளிவிகார அமைச்சின் இந்தோ - பசுபிக் பிராந்தியங்களுக்கான பிரதி அமைச்சர் வெல்டன் எப் உள்ளிட்ட கனடிய அரசியல் தரப்பினருடனான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று வியாழக்கிழமை ஒட்டாவாவில் உள்ள அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததோடு கோரிக்கை கடிதமொன்றையும் கையளித்துள்ளார்.

அக்கடித்தில், ஈழத்தமிழர் மீது திட்டமிடப்பட்ட தொடர்தேர்ச்சியான இன அழிப்பு இலங்கைத் தீவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று பாராளுமன்றக் குழுத் தலைவராக நான் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழர்களின் பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி 1956 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய திருகோணமலைப் பிரகடனத்தில் எவ்வாறு இந்தத் திட்டமிடப்பட்ட இன அழிப்பை இலங்கை அரசு கட்டமைப்பு ரீதியாக மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதென்பதை ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான மறைந்த தந்தை செல்வா ஆரம்பத்திலேயே தெளிவாக விளக்கியிருந்தார்.

அதன் ஒரு வடிவமாகவே ஒற்றையாட்சி அரசியலமைப்பு தொழிற்படுகிறதென்று சர்வதேச தரப்புகளை நோக்கி இலங்கை எதிர்நோக்கும் சிக்கல் என்ற வெளியீட்டை முதல் முதலாக சர்வதேசம் நோக்கி தமிழரசுக்கட்சி முன்வைத்திருந்தது. இது தொடர்பில் அன்று தொட்டு இன்று வரை சர்வதேசத்தின் பங்கை மக்கள் பிரதிநிதிகளாக நாம் வலியுறுத்திவருகிறோம்.

இலங்கைத் தீவு தொடர்பான பொறுப்புக்கூறல் அர்த்தமுள்ளதாகுவதெனில் அதைப் பின்வரும் மூன்று விதமாகப் படிநிலைப்படுத்தப்பட்ட முக்கியத்துவத்தோடும் ஒழுங்கோடும் அணுக வேண்டும் என்பது எமது பார்வையாக உள்ளது:

1) தலையாய சர்வதேசக் குற்றமான இன அழிப்புத் தொடர்பான பொறுப்புக்கூறல்.

2)இதர சர்வதேசக் குற்றங்களான போர்க்குற்றங்கள், மனிதத்துவத்துக்கு எதிரான குற்றங்கள், சித்திரவதை, வலிந்து காணமலாக்கப்பட்டமை ஆகியவை பற்றிய பொறுப்புக்கூறல்.

3) மேற்குறித்த குற்றங்கள் மீள்நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில் பல பத்தாண்டுகளாகத் தீர்க்கப்படாது புரையோடிப்போயிருக்கும் தேசியப் பிரச்சினைக்கான தீர்வை, குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தும் கூட்டாட்சி அரசியலமைப்பொன்றை ஏற்படுத்துவதும் பொறுப்புக்கூறலின் முக்கிய பெறுபேறாக அமையவேண்டும்.

மேற்குறித்த மூன்று முனைகளில் அர்த்தமுள்ளவகையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதிலும் மீள்நிகழாமையை உறுதிப்படுத்துவதிலும் பெருந்தொகையாகப் புலம்பெயர்ந்து ஈழத்தமிழர்கள் வாழும் நாடுகளில் முதன்மையான நாடான கனடா நாடானது பின்வரும் வழிகளில் காத்திரமாக உதவ வேண்டும் என்று அனைத்து ஈழத்தமிழர் மற்றும் தமிழ் பேசும் மக்கள் சார்பாகவும் வேண்டி நிற்கிறேன்-என்றுள்ளது. (அ)

## இந்திய மீனவர்களின்...

அணுகுமுறை என்றால் என்ன என்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் வினவுள்ளேன்.”

- இவ்வாறு முன்னாள் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய குறித்த விடயம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதியின் அண்மைய இந்திய விஜயத்தின்போது இலங்கை - இந்தியா இடையே கடற்றொழிலாளர்கள் விடயம் தவிர இணக்கம் காணப்பட்ட அல்லது கைச்சாத்திடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான அரசால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களை வலுவூட்டியதாகவே அமைந்துள்ளது. அதனடிப்படையில் குறித்த செயற்பாட்டை நான் வரவேற்கின்றேன்.

இதேவேளை, கடற்றொழிலாளர் பிரச்னைகளில் எதுவிதமான தீர்வுகளையும் குறித்த விஜயத்தின்போது எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இதேநேரம் மனிதாபிமான அடிப்படையில் குறித்த விடயத்தை அணுக வேண்டும் என்ற நிலைப்பாடு வலியுறுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறாயின் மனிதாபிமான நிலைப்பாடு என்பது என்ன என்பதே இன்றுள்ள கேள்வியாக இருக்கின்றது.

அதாவது இலங்கையின் கடற்பரப்புக்குள் இந்திய மீன்பிடியாளர்கள் வந்து மீன்களைப் பிடித்துச் செல்வதற்கும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் இலங்கைக் கடற்படையினர் அவர்களைக் கைது செய்யாதிருக்கவேண்டும் என்பதே இந்த மனிதாபிமான நிலைப் பாடாக இருக்கவேண்டும்.

ஆனால் எனது நிலைப்பாடு அன்றும் சரி இன்றும் சரி எமது கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக இந்திய மீன்பிடியாளர்கள் உள்நுழைந்து மீன்களைப் பிடிக்கவோ, எமது வளங்களை அபகரிக்கவோ ஒரு வினாடி கூட இடமளிக் கக்கூடாதென்பதாகவே இருக்கின்றது. இதை நான் பொது வெளியிலும் பல தடவைகள் கூறியிருக்கின்றேன். - என்றார். (அ-05)

## ஜனாதிபதிக்கு...

ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை ஜனாதிபதிக்கு இந்திய அரசாங்கம் வழங்கிய கௌரவத்தை நாங்கள் மதிக்கின்றோம். இந்திய மக்களும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அந்த மகிழ்ச்சிக்கு அப்பால் மக்களாகிய நாங்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் என்ன நிறைவேற்றப்பட்டுள்ளன?

இந்திய பிரதமருக்கும், இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தை, உடன்படிக்கையில் இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி குறித்து பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டாலும், மீனவர்கள் குறித்து அவர் தெரிவித்த விடயம் எழுத்து வடிவில் இல்லை. வெறும் கலந்துரையாடலாகவே அமைந்துள்ளது - என்றார்.

## இலங்கைக்கு...

இலங்கைக்கான பணிப்பாளர் தகபுமி கடோனோ மற்றும் இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் ரொனால்ட் கொமஸ்டர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இலங்கையின் மின்சாரத் துறையில் உள்கட்டமைப்பு அபிவிருத்திக்கானு கடனுதவிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடந்த நவம்பர் மாதம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த கடனுதவி மூலம் இலங்கை மின்சார சபையின் நீண்ட கால பரிமாற்றத் திட்டத்தில் பல அத்தியாவசியத் திட்டங்கள் 2025-2027 இல் செயல்படுத்தப்படும். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சஜித்தின் சான்றிதழ்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும்!

## அமைச்சரவைப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 20

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளு மன்றத்தில் காண்பித்த சான்றிதழ்கள் மற்றும் ஆவணங் களை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று அமைச்சர வைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

தனது கல்வித் தகைமை தொடர்பான சான்றிதழ்க ளையும், ஆவணங்களையும் சஜித் பிரேமதாஸ பாராளு மன்றத்தில் நேற்று முன் தினம் முன்வைத்து உரையாற்றி னார்.

எனவே, ஆளுங்கட்சியினரின் சான்றிதழ்கள் எப் போது முன்வைக்கப்படும் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கூறியவை வருமாறு-

சான்றிதழ்கள், ஆவணங்கள் எதிர்க்கட்சி தலைவர் பாராளுமன்றத்தில் காண்பித்திருந்தார். ஆனால் பாராளுமன்ற ஹன்சாட்டுக்கு நேற்று மாலைவரை அனுப்பவில்லை. இன்று காலையும் தேடி பார்த்தேன், அவை கையளிக்கப்படவில்லை.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவற்றை வழங்கிய பின்னர் ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவ்வாறு ஆராய்ந்த பிறகு அது பற்றி அறிவிக்கப்படும் - என்றார்.

# எட்கா உடன்படிக்கை குறித்து உண்மையை வெளியிடுங்கள்!

## ஜனாதிபதியிடம் கம்மன்பில கோரிக்கை

கொழும்பு, டிசெ. 20

எட்கா உடன்படிக்கையின் உண்மைத்தன்மையை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என பிவிதுரு ஹெல உருமயவின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டின் ஜனாதிபதி அநுரகுமாரவும் ஜே.வி.பி தலைவர் அனுரகுமாரவும் வித்தியாசமானவர்களா..?

எட்கா உடன்படிக்கைக்கு நாங்கள் நீண்ட காலமாக எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம்.

இதன் உண்மைத் தன்மையை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

அத்தோடு முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறித்தும் அரசாங்கம் ஆராய வேண்டும் - என்றார். (அ)

# அநுரவின் இந்தியப் பயணம் அரசு இன்று விசேட அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 20

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய பயணத்தில் இரு நாடுகளும் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகள் மற்றும் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த ஆலோசிக்கப்பட்டுள்ள உத்தேச திட்டங்கள் தொடர்பிலான விசேட அறிவிப்பை வெளி விவகார அமைச்சர் விஜித ஹேரத் இன்று வெள் ளிக்கிழமை வெளியிட உள்ளார்.

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் விசேட ஊடகவிலாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதியின் இந்தியப் பயணம் தொடர் பில் எவ்வித அறிவிப்புகளையும் அரசாங்கம் வெளியிட வில்லை. எட்கா உடன்படிக்கையை செய்துகொள்ள அரசாங்கம் இணங்கியுள்ளதாக செய்திகள் வெளியாகி யுள்ளன. இது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சரு மான நளிந்த ஜயதிஸ்ஸ,

ஜனாதிபதியின் இந்திய பயணம் மற்றும் அங்கு பேசப்பட்ட மற்றும் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட விட யங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாளை (இன்று) விசேட அறிவிப்பொன்றை வெளிவிவகார அமைச்சில் விடுக்க உள்ளார் என பதில் அளித்தார். (அ)

# வடக்கில் தொற்றிய எலிக்காய்ச்சல் விலங்குகளுக்கும் பரவும் அபாயம்!

## மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 20

**வடக்கு மாகாணத்தில் தற்போது பரவியுள்ள எலிக்காய்ச்சல் மனிதர்களில் மட்டுமல்ல பல்வேறு விலங்குகளுக்கும் பரவக் கூடிய அபாயம் காணப்படுவதாக வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் எஸ். வசீகரன் தெரிவித்தார்.**

எலிக்காய்ச்சல் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு திருநெல்வேலியில் உள்ள கால் நடை சுகாதார உற்பத்தி திணைக் களத்தில் நேற்றுக் காலை இடம் பெற்ற போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்: -

இந்நோய் லெப்றரோஸ்பைரா எனப்படும் ஒரு வகை பக்டீரியா வினால் ஏற்படுத்தப்படுகின்ற தொற்று நோயாகும்.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட எலிகளின் சிறுநீரில் இப்பக்டீரி யாக்கள் வாழும்.

எலியின் சிறுநீர் மற்றும் மலம் மூலம் வெளியேறும் இப் பக்ரீரியா மழை காலங்களில் மழைநீர் மற்றும் வெள்ளத்தில் கலந்து அயற்புறங் களுக்கு பரவும்.

மழை காலங்களில் குடி தண்ணீர்க் கிணறுகளில் கூட தொற் றுக்கிருமிகள் கலக்கக்கூடும்.

தொற்றடைந்த நீரை பருகுவ தாலோ அன்றி காயமுற்ற தோல், கண், வாய் போன்ற பகுதிகளில் தொடுகை உறும் வேளைகளில் இப் பக்ரீரியா உடலுள் ஊடுருவிச் செல லும் வாய்ப்புள்ளது.

இதுவே எமது உடலில் எலிக் காய்ச்சல் பரவ பிரதான காரணமாக உள்ளன. இதே பக்ரீரியாக்கள் நாய், ஆடு, மாடு, பன்றி போன்ற வளர்ப்பு மிரு கங்களில் கூட இந்நோயை ஏற் படுத்திவிடவும் வாய்ப்புக்கள் உண்டு.

வடக்கு மாகாணத்தின் வடம ராட்சி மற்றும் தென்மராட்சி பகுதி களில் அண்மைக் காலத்தில் மனித ரில் அடையாளம் காணப்பட்ட இந்நோயின் தாக்கத்தை கட்டுப் படுத்துவதற்கான நடவடிக்கை களின் ஒரு பகுதியாக வளர்ப்பு விலங்குகளில் இந்நோயின் கிருமி கள் தொற்றை பரிசோதனை மூலம் கண்டறிந்து உரிய சிகிச்சைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கை கள் மத்திய மற்றும் மாகாண கால் நடை உற்பத்தி சுகாதார திணைக் களங்களினால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இச்செயற்பாடுகளில் நேரடியாக இணைந்து கொள்ளும் பொருட்டு மத்திய கால்நடை ஆராய்ச்சி நிலை யத்திலிருந்து நோய் ஆராய்ச்சி நிபுணர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்து பாதிக்கப்பட்ட பிரதேசங் களில் தமது ஆய்வுகளை மேற் கொண்டுள்ளனர். - என்றார். (அ)

# லைக்கா மொபைல் ஊழியரில் 90 வீதமானோர் வேலைநீக்கம்?

## த கார்டியன் பத்திரிகை தகவல்

கொழும்பு, டிசெ. 20

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற இரு தேசிய தேர்தல்க ளிலும் குறிப்பாக பாராளுமன்ற தேர்தலில் பல்வேறு கட்சிகளுக்கு கோடிக்கணக்கில் பணத்தை அள்ளி வீசியதாகக் கூறப்படும் பிரிட்டனில் வாழும் இலங்கை தமிழ் வர்த்தகப் பிரமுகரான அல்லிராஜா சுபாஸ்கரனுக்கு சொந்தமான பெரிய ரெலிக்கொம் நிறுவனமான லைக்கா மொபை லின் ஐக்கிய இராச்சிய ஊழியர்க ளில் 90 வீதமானவர்கள் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களுக்கு முன்ன தாக வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

கம்பனி நிர்வாகத்தினால் இவ் வாரம் வெளியிடப்பட்டிருக்கும் அறிவித்தலின் பிரகாரம் ஐக்கிய இராச்சிய லைக்கா மொபைலின் 300 இற்கும் அதிகமான ஊழியர் கள் தங்கள் வேலைகளை இழக்கப் போவதாக தெரிய வருகிறது.

இது தொடர்பாக பிரிட்ட னின் முக்கியமான தினசரி த கார் டியன் உட்பட ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருக்கின் றன.

லைக்கா மொபைல் நிறுவனம் கோடிக்கணக்கில் பெறுமதிசேர் வரியை (வற் ) வரியைச் செலுத் தாமல் ஏய்ப்புச் செய்த காரணத் தால் பிரிட்டனின் வருவாய் மற்றும் சுங்கத் திணைக்களத்து டன் பெரும் சர்ச்சக்குள்ளாகி யிருப்பதுடன் அண்மைக் கால மாக நட்டத்தில் இயங்குவதாக வும் கூறப்படுகிறது.

பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு பெருமளவில் நிதியை வழங்கி வந்த சுபாஸ்கரனின் கம் பனியின் மொபைல் தொலைபேசி சிம் அட்டைகள் குறைந்த வருமா னம் பெறும் ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் மத்தியில் பாரிய கிராக்கியைக் கொண்டிருக்கிறது. இந்த சிம் அட்டைகளை பயன் படுத்தி ஐக்கிய இராச்சியத்துக்குள் ளும் வெளிநாடுகளுக்கும் மிகவும் குறைந்த செலவில் தொடர்பு கொள்ள முடியும்.

லைக்கா மொபைல் கடந்த வெள்ளிக்கிழமை லண்டன் நகரில் உள்ள அதன் தலைமையகத்தில் உள்ள ஊழியர்களுக்கு விடுத்த அறிவிப்பில் கம்பனி பாரதூர மான சவாலை எதிர்நோக்குவதா கவும் 316 ஊழியர்களை வேலை யில் இருந்து நீக்கி ஐக்கிய இராச்சி யத்தில் வெறுமனே 48 ஊழியர்க ளுடன் மாத்திரம் இயங்கப்போவ தாகவும் கூறியிருக்கிறது.

லைக்கா குழுமத்தின் ஓர் அங்க மான பெல்ல கோசா நிறுவனத்தி னால் 2019 ஆம் ஆண்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தனிப்பட்ட இரவு விருந்துபசாரம் ஒன்றில் கலந்துகொண்ட போறிஸ் ஜோன் சன் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக வருவதற்கான தனது முயற்சிக்கு அல்லிராஜா சுபாஸ்கர னின் நிதியுதவியை நாடியதாக வெளியான செய்திகளை அடுத்து பிரிட்டனின் பிரதமராக இருப்ப தற்கு தகுதியற்றவர் என்று ஜோன் சனை தொழிற்கட்சி வர்ணித்தி ருந்தது. (அ)

# கடவுச்சீட்டு வழங்கலில் மீண்டும் நெருக்கடிகள் ஏற்படும் சாத்தியம்

கொழும்பு, டிசெ. 20

கடவுச்சீட்டு வழங்குவதில் உள்ள நெருக்கடி மேலும் அதிகரித் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள் ளது.

தற்போது கிடைக்கக்கூடிய கடவுச்சீட்டுப் பிரதிகளின் எண் ணிக்கை அடுத்த ஆண்டு ஜூலை மாதம் வரை மட்டுமே போதுமான தாக இருக்கும் எனவும் கூறப்படு கின்றது.

எனவே, இந்தப் பிரச்னை ஒரு சமூகப் பிரச்னையாக மாறுவதற்கு முன்பு, அதைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை வழங்க ஒரு சிறப்புக் குழுவை நியமிக்க அரசாங் கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன்படி, நிலைமையை ஆய்வு செய்து அதைத் தீர்ப்பதற்கான பரிந்துரைகளை உருவாக்க அமைச் சரவை ஒரு குழுவை நியமிக்க முடிவு செய்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட் டுள்ளது.

இரண்டு வாரங்களுக்குள் அர சாங்கத்துக்கு பரிந்துரைகளை சமர்ப்பிக்கும் வகையில் இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத் தில் விலைமனு கோரல் ஒப்பந்தம் தொடர்பான வழக்கொன்று தற்போது நடந்து வருகிறது. எனவே வழக்கைப் பாதிக்காமல் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடி வெடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.